**CLAIMS BUREAU**
NO WIN NO FEE
Had an accident in the last 3 years? NOT YOUR FAULT
RING OUR 24 hr Freephone
08000 711 555
7 Gladstone Parade, Edgeware Road NW2

FREE இலவசம்
The UDHAYAN
# உதயன்
Estd.: 1996
UK's No.1 National Tamil Newspaper

**Asian Funeral Care Ltd.**
Funeral Services
Welcome: International Transportation and DSS Claims
Tel: 020 8909 3030 (24 Hours)
(Sanjay L. Lodhia)
35 Kenton Park Parade, Kenton Road, Kenton Harrow, Middx. HA3 8DN (Next to Barclays Bank)

e-mail: thelondon@udhayan.freeserve.co.uk
UN-29 Mar. '03
For News & Advertising: 020 8952 5677 12 பக்கங்கள்

# சட்ட உதவியில் மோசடி

## 100க்கு மேற்பட்ட அமைப்புகள் மீது சந்தேகம் வலுத்துள்ளது

தஞ்சம் கோருவோருக்கு வழங்கப்படும் சட்ட உதவியில் நூற்றுக்கு மேற்பட்ட சட்ட நிறுவனங்கள் மோசடி செய்துள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது. சட்ட சேவைகள் ஆணைக்குழு (The Legal Service Commission) கடந்த ஆண்டு இவ்வகையான நிறுவனங்களில் இருந்து £4 மில்லியனை வசூலித்தது. மோசடி செய்யப்பட்ட தொகை பல மில்லியன்கள் இருக்கும் என நம்பப்படுகிறது.

2000 ஆண்டில் £60 மில்லியனாக இருந்த இந்த சட்ட உதவிகள் தொகை தற்போது £170 மில்லியனாக உயர்ந்து உள்ளது. அண்மைக் காலங்களில் தஞ்சம் கோருவோரின் எண்ணிக்கையும் திருப்பி அனுப்படும் முடிவிற்கு எதிராக வழக்குப் பதிவு செய்வதும் அதிகரித்து இருப்பதே காரணமாக உள்ளது. இந்த சட்ட உதவிகள் தஞ்சம்கோருவோருக்காகச் செயற்படும் சட்டத்தரணிகள், ஆலோசகர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்படுகிறது.

நீதிமன்றில் வெல்ல முடியாத வழக்குகளைக் கூட சில சட்டத்தரணிகள் மேன்முறையீட்டுக்கு அனுப்புவ்தாக அமைச்சர்கள் நம்புகின்றனர். வழக்கு எப்படிப் போனாலும் அரசிடம் இருந்து பணத்தை கறக்கலாம் என்ற அடிப்படையில் இந்தச் சட்டத்தரணிகள் செயற்படுவதாக அவர்கள் கருதுகின்றனர்.

இது வரை மோசடியில் ஈடுபட்ட 30 நிறுவனங்கள் இழுத்து மூடவைக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடும் The Legal Srevice Commission தலைவர் ஸ்டீவ் ஓர்சாட் 460 நிறுவனங்கள் குடிவரவு வேலைகள் தொடர்பாக ஒப்பந்தம் செய்துள்ளன எனத் தெரிவித்தார்.

பெப்ரவரி 21ம் திகதி வடக்கு இலண்டனில் உள்ள ஜொனதன் அன் கோ என்ற சட்ட நிறுவனத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வழக்கில் அந்நிறுவனம் உள்துறை அமைச்சுக்கு £17,000 நட்ட ஈடு கட்டப் பணிக்கப்பட்டது. இவ்வழக்கில் தீர்ப்பளித்த நீதவான் Maurice Kay இது ஒரு மோசமான துஸ்பிரயோகம் எனக் குறிப்பிட்டார்.

இந்த சட்ட உதவிகளைப் பெற்ற 20 சட்ட நிறுவனங்கள் மில்லியனெயர்ஸ் ஆகியிருப்பதாக தெரியவருகிறது. இப்படி ஒவ்வொரு நிறுவனமும் குறைந்தது ஒரு மில்லியனையாவது சட்ட உதவியாக பெற்று உள்ளது. ஒரு முன்னணிச் சட்ட நிறுவனம் £6 மில்லியனை தனது சட்ட உதவியாகப் பெற்று உள்ளது.

**World Wide Flights** TTAL
from
Chennai £475 Calcutta £475
Bangkok £385 Dubai £259
Colombo £425 Delhi £485
Colombo to Jaffna R/T £40
Valid for month of March (Conditions apply)
Other destinations available plus taxes
Call 0800 093 1411
Email: info@ttal.co.uk
IATA

The International
**Wood Floor Centre**
Laminate Flooring available in 6 colours
£5.95 sq.m + VAT only
Engineered Floors £14.99 + VAT only
Solid Floor £19.99 + VAT only

Free Estimates, Site Surveyor & Free Delivery
Open 7 Days Tel: 020 8951 4395 - 4495 Fax: 020 951 4251
21 North Parade, Mollison Way, Edgware HA8 5QH
www.internationalwoodfloor.co.uk

**ALEAF WINDOWS LTD.**
50% OFF Georgian Leaded Windows


FREEPHONE 0800 028 4747

**BIRDY & CO**
Solicitors
Legal Aid + Private
Immigration, Criminal, Landlord & Tenant, Matrimonial
Personal Injury, Civil Litigation, Conveyancing
Tel: 020 8900 9112
Emergency: 07802 436120
606B High Road
Wembley, Middx. HA0 2AF

**Starline**©

தமிழில் பேசி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய
Great Deals on:
* Connections
* Upgrades
* Pay As You Go
* Phone Accessory
* Car kit fittings
* Repairs
T-Mobile
Free Phone: 0500 120 121
Open: 10am - 7pm Mon - Sat & 12 - 6pm Sun
235 The Broadway Southall UB1 1ND

**A40 Wholesale Ltd.**
Specialists in Wines, Beer, Spirits and Softdrinks
* FREE Delivery
* Special Instore Prices
* Credit Cards Accepted
* Open 7 Days
Unit 4, 427 Long Drive, Greenford, Middx. UB6 8UH (Behind B&Q)
Tel: 020 8578 5500
Fax: 020 8578 8889

**C&S DISCOUNT STORE**
BABY AND CHILDRENS' WEAR SPECIALISTS
HALF PRICE SALE AT

C&S சவுத்தோல், கிங்ஸ்பரி
Fixed prices Best Prices
714-716 Kenton Road, Kingsbury, Harrow HA3 9QX
109-111 The Broadway Southall Middx UB1 1LN
Open Mon-Sun 10.00am 6.00pm
(Kingsbury closed on Sundays)
At very reasonable price Hall for Hire Good facility near Alperton
TEL: 020 8903 6563

**Palm Beach Restaurant**
Fully Licenced Finest Sri Lankan & South Indian Cuisine
Vegetarian and Non-vegetarian
Open 12.00 noon to 3.00 pm & 6.00 pm to midnight
10% Discount on PARTY ORDERS & EAT-IN over £50
Tel: 020 8900-8664 / 07939 587 338 / 020 8900 1990
Website: www.palmbeachuk.com
17 Ealing Road Wembley Middx HA0 4AA

Tyres • Exhaust • S. Absorbers • Brakes • Services
**THE ALIGNMENT CENTRE**
Specialist in Advanced Four Wheel Alignment
FREE Wheel Alignment Check
10% OFF
Unit 7, Sheraton Business Centre, Wadsworth Close, Off Wadsworth Road, Perivale UB6 7JD
Tel: 020 8998 7486
Fax: 020 8998 8615

The UDHAYAN உதயன்
ADVERTISE FOR BEST RESULTS
020 8952 5677

# தமிழர் செறிந்த நியுஹாம் முதலாவது சிறுபான்மை நகரம்

கிழக்கு இலண்டன் நியூஹாமே பிரித்தானியாவின் முதல் சிறுபான்மை நகரம் என 2001ம் ஆண்டில் எடுக்கப்பட்ட சனத்தொகைப் புள்ளி விபரம் தெரிவிக்கிறது. பிரித்தானியாவின் தமிழர் நகரான நியூஹாமில் 60 வீதமானவர்கள் சிறுபான்மையினராக உள்ளனர். இங்கு 16,901 (6.9 வீதம்) இந்துக்கள் உள்ளதாக சனத்தொகைப் புள்ளிவிபரம் தெரிவிக்கிறது. நியூஹாமை அடுத்து சிறுபான்மையினர் பெரும்பான்மையாக உள்ள நகரம் வடமேற்கு இலண்டனில் உள்ள பிரன்ற் என அப்புள்ளி விபரம் தெரிவிக்கிறது. இப்பகுதியின் மொத்த சனத்தொகையில் 55 வீதமானவர்கள் சிறுபான்மையினராக உள்ளனர். இங்கு 45,228 இந்துக்கள் வாழ்கின்றனர்.

2001 புள்ளி விபரக் கணக்கெடுப்பில் தமிழர்கள் தங்களை சரியாக அடையாளம் கண்டு குறிப்பிடாமல் விட்டதால் அவர்களது சனத்தொகையைச் சரியாக அறியக் கூடியதாக இல்லை. இந்தியா, மலேசியா, இலங்கை, மொரிசியஸ் எனப் பல்வேறு பாகங்களிலும் இருந்து புலம் பெயர்ந்த தமிழர்கள் தங்களை தமிழர்களாக அடையாளப்படுத்தாத வரை அவர்கள் சிறுபான்மைக்குள்ளும் சிறுபான்மையாகச் சென்றுவிடுகின்றனர். (மறைந்துவிடும் அபாயமும் உள்ளது.) இதனால் தமிழர்களுக்குள்ள பிரத்தியேக தேவைகள் கவனிக்கப்படாமல் போகின்றது என்கிறார் ஹவுன்சிலோவில் வாழும் சுபேந்திரன். அவர் மேலும் தெரிவிக்கையில் எங்களை நாங்கள் சரியாக அடையாளப்படுத்துவதால் மட்டுமே எங்களுக்கு உள்ள உரிமைகளையும் சலுகைகளையும் நாங்கள் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

புலம் பெயர்ந்த தமிழர்கள் பெரும்பாலும் இந்துக்களாக இருப்பதால் இந்துக்களின் சனத்தொகை அதிகமாக உள்ள இடங்களில் தமிழர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் எனக் கூறமுடியும். ஆனால் தமிழ் முஸ்லீம்கள், தமிழ் கிறிஸ்தவர்கள் மற்றும் மத நம்பிக்கையற்றவர்கள் ஆகியோரும் இருப்பதால் இந்த சனத்தொகையின் போக்கை சரியாகக் கணிப்பிட முடிவதில்லை. மேலும் தமிழர்களல்லாத இந்தியர்கள் இந்துக்களின் முக்கிய பகுதியினராகவும் உள்ளனர். மேலும் சிறுபான்மையினர் தங்களை பிரித்தானியர்களாக அடையாளப்படுத்தும் போக்கும் அதிகரித்து உள்ளதாக அப்புள்ளி விபரம் கூறுகிறது. இதன் படி தமிழர்களும் தங்களை தமிழர்களாக அடையாளம் காணாமல் பிரித்தானியர்களாக அடையாளம் காணும் தன்மை காணப்படுகிறது.

# தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் இந்துக்களின் மக்கள் தொகை

| உள்ளாட்சி மன்றம் | இந்துக்கள் | வீதம் |
|---|---|---|
| Brent | 45,228 | 17.2 |
| Harrow | 45,548 | 19.6 |
| Ealing | 23,384 | 7.8 |
| Barnet | 21,011 | 6.7 |
| Redbridge | 18,661 | 7.8 |
| Croydon | 16,781 | 5.1 |
| Newham | 16,901 | 6.9 |
| Hounslow | 16,064 | 7.6 |

இங்கிலாந்து - வேல்ஸ் மதங்கள்

முஸ்லீம்கள் - 1,540,000 (3.0 வீதம்)

இந்துக்கள் - 552,000 (1.1 வீதம்)

சீக்கியர்கள் - 329,000 (0.6 வீதம்)

# ஈராக் மீதான யுத்தம் தொழிற்கட்சியில் பிளவு

அமெரிக்கா நடத்தவிருக்கும் ஈராக் மீதான தாக்குதலுக்கு ரொனி பிளெயர் ஆதரவளித்து வருவது அவரது கட்சிக்குள்ளேயே பிளவை ஏற்படுத்தி உள்ளது. தீவிர இடதுசாரி பா உ க்கள் ஐ நா வின் அனுமதியின்றிய ஈராக் மீதான தாக்குதலுக்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றன. மந்திரி சபையில் இருந்த சர்வதேச அபிவிருத்திக்குப் பொறுப்பான செயலாளர் கிளயர் சோட் ஐ நா அனுமதியின்றிய தாக்குதல் நடத்தப்பட்டால் தான் பதவியில் இருந்து இராஜிநாமா செய்யப்போவதாக எச்சரித்து உள்ளார். இடதுசாரிப் போக்குடைய கிளயர் சோட் ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதலின் போது அம்மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கும் விடயத்தை நேரடியாகவே நின்று கண்காணித்தவர்.

மேலும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் சந்திப்பின் போதும் அதில் கலந்து கொண்ட சோட் புனர்வாழ்வு நடவடிக்கைகள் சர்வதேச அமைப்பின் கண்காணிப்பில் நடத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக நின்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. தனது முடிவுகளில் உறுதியாக இருக்கும் சோட் அமைச்சரவையில் மிகவும் மதிக்கப்படும் ஒரு அரசியல்வாதி. இவரின் இந்த முடிவு இன்னும் சிலரையும் தூண்டலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஈராக் யுத்தம் தொடர்பான வாக்கெடுப்பில் 122 தொழிற்கட்சி உறுப்பினர்கள் ரொனி பிளெயருக்கு எதிராக வாக்களித்தனர்.

# சிறுபான்மையினரின் அரசியல் பிரதிநிதித்துவம் போதாது

1991 சனத்தொகைக் கணக்கெடுப்பில் 6 வீதமாக இருந்த சிறுபான்மையினரின் மக்கள் தொகை 2001 கணக்கெடுப்பில் 9 வீதமாக அதிகரித்து உள்ளது. இதில் 5 விதமானவர்கள் ஆசியர்களாக உள்ளனர். இக் கணக்கெடுப்பு விகிதாசாரப்படி பார்த்தால் 659 பா உ க்களைக் கொண்ட வெஸ்ற்மினிஸ்ரர் பாராளுமன்றத்தில் 33 ஆசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்க வேண்டும். ஆனால் 7 ஆசிய பா உ க்களே உள்ளனர்.

பிரித்தானியாவில் வாழும் தமிழர்களின் நிலையும் இதே மாதிரியாகவே உள்ளது. தலைநகரில் 100,000 வரையான தமிழ் மக்கள் வாழ்ந்த போதும் அவர்கள் சரியான முறையில் அரசியலில் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லை. தலைநகரில் இருந்த 1,855 உள்ளாட்சி அலுவலர் தெரிவில் 6 தமிழர்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டனர். அதிலும் இரு உள்ளாட்சிப் பிரிவுகளில் தமிழர்கள் பெரிதாக இருக்கவில்லை. 50க்கும் மேற்பட்ட உள்ளாட்சிப் பிரிவுகளில் தமிழர்கள் தீர்மானிக்கும் சக்தியாக இருந்த போதும் தமிழ் வேட்பாளர்கள் போட்டியிடவில்லை.

# ஆசியர்கள் இதயநோய்த் தவிர்ப்பு மாநாடு

கிழக்கு இலண்டன் வோல்தம்ஸ்ரோவில் இதய நோய்த் தவிர்ப்பு மாநாடு பெப்ரவரி பிற்பகுதியில் இடம்பெற்றது. 380 பேர் வரை கலந்து கொண்ட இம்மாநாட்டில் ஆசியர்கள் மத்தியில் இதயநோய் என்பது கருப்பொருளாக அமைந்தது. ஐரோப்பியர்களைக் காட்டிலும் தென்னாசியர்கள் 40 வீதம் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். இதற்கான காரணத்தைக் கண்டறியும் ஆய்வுத்திட்டம் கடந்த ஆண்டு செப்ரம்பரில் விப்ஸ் குறொஸ் மருத்துவ மனையில் இதய நிபுணர் சன்டி குப்தா பொறுப்பில் ஆரம்பிக்கப்பட்டது.

இம்மாநாட்டில் மக்கள் தமது வாழ்க்கை முறையை மாற்றுவதன் மூலம் இதய நோய் ஏற்படக் கூடிய வாய்ப்புகளைத் தவிர்க்க முடியும் என்பது எடுத்துக் கூறப்பட்டது. மேலும் அது விடயமான விழிப்புணர்வை ஏற்படுத்துவது மாநாட்டின் முக்கிய அம்சமாக அமைந்தது. இன்று இலங்கைத் தமிழர்களில் வேகமாகப் பரவிவரும் சோகம் அகால மரணங்களாகும் எனக் குறிப்பிடும் மருத்துவவியலாளர் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் இங்கிலாந்தைப் பொறுத்தவரையில் ஆசிய மக்களுக்குக் காலனாக வரும் வியாதிகளில் இதய வருத்தங்கள் மிகவும் முன்னணியில் இருக்கின்றன எனக் குறிப்பிட்டார். இவர் அண்மையில் இதயநோய் சம்பந்தமான நூல் ஒன்றை வெளியிட்டு உள்ளார்.

# ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் மாணவர்கள்

வேலைக்கு ஆசிரியர்கள் விண்ணப்பிக்கும் போது அவர்களைத் தெரிவு செய்யும் விடயத்தில் மாணவர்களும் ஈடுபடுத்தப்படுகின்றனர். நியுஹாமில் உள்ள Eastlea Community School ற்கு விண்ணப்பித்த ஆறு ஆசிரியர்கள் தலைமை ஆசிரியராலும் ஆளுநர்களாலும் மதிப்பிடப்பட்டபின் 11 வயதுடைய மாணவர்களைக் கொண்ட மாணவர் குழுவிடம் மதிப்பீட்டுக்கு விடப்பட்டனர். இம்மாணவர்கள் தமக்கு கற்பிக்க அந்த ஆசிரியருக்கு தகமை உள்ளதா என்பதை மதிப்பிட்டனர். மாணவர்களின் இந்த மதிப்பீடு பற்றி வேலைக்கு விண்ணப்பித்த ஆசிரியர்கள் எந்த ஆட்சேபணையையும் தெரிவிக்கவில்லை.

கடந்த 5 அண்டுகளுக்கு முன்னர் கீழ் மட்டத்தில் இருந்த இப்பாடசாலை தற்போது சிறந்த ஆசிரியர்களை வேலைக்குத் தெரிவு செய்து மிகவும் வளர்ச்சி பெற்று உள்ளது.

# தமிழ் பகுதியில் பாலியல் கல்வி அறிமுகம் - பெற்றோர் எதிர்ப்பு

14 - 15 வயதுடைய மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட உள்ள பாலியல் கல்வித் திட்டம் பெற்றோர்களால் கடுமையாக எதிர்க்கப்படுகிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள 150 பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட உள்ள இப்பாலியல் கல்வித் திட்டம் இலண்டனில் தமிழ் மக்கள் அதிகம் வாழும் நியூ□ாம் பகுதிப் பாடசாலைகளிலும் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இப்பாலியல் கல்வித் திட்டத்தின் கீழ் 100,000 மாணவர்கள் கற்பிக்கப்பட இருக்கின்றனர். சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட இப்பாடத்திட்டத்திற்கு £400,000 ஒதுக்கப்பட்டு உள்ளது.

'A Pause' என அழைக்கப்படும் இக்கல்விப் பாடம் முழுமையான உடலுறவுக்கு மாற்றீடான நெருக்கம் (அணைத்தல், முத்தமிடல் மற்றும் பாலியல் தூண்டல்கள்) தன்னினச் சேர்க்கை போன்றவற்றை மாணவர்களுக்குப் போதிக்க உள்ளது. குடும்ப அமைப்புக்காகக் குரல் கொடுக்கும் அமைப்பு இப்பாடத்திட்டத்தை வன்மையாக எதிர்க்கின்றது. முழுமையான உடலுறவுக்கு மாற்றீடானவற்றை மாணவர்களின் விவாதத்திற்கு விடுவதால் இளம் தாய்களின் உருவாக்கத்தை கட்டுப்படுத்த முடியும் என இத்திட்ட முகாமையாளர் ஜோன் றீஸ் தெரிவிக்கிறார். ஆனால் இவருடைய கருத்து பெரிதாக விலைபோகவில்லை.

ஐரோப்பாவில் பிரித்தானிய இளம் தாய்மார்களின் எண்ணிக்கையில்

(3ம் பத்தி மேலே)

(3ம் பத்தி தொடர்ச்சி)

முன்னணியில் உள்ளது. இங்கு கருக்கலைப்பும் அதிகரித்து வருகிறது. மேலும் பாலியல் நோய்கள் அதிகரிக்கின்றது. இந்நிலையில் இப்படியான கல்வித் திட்டம் மாணவர்களை உடலுறவுக்கு தூண்டச் செய்யும் என பெற்றோர் அஞ்சுகின்றனர். தங்கள் குழந்தைகளுக்கு எப்படியான பாலியல் கல்வி கொடுக்கப்பட வேண்டும் என்பதை முடிவு செய்யும் உரிமை பெற்றோருக்கு உண்டு என றொறிக் கட்சிப் பள்ளிகளின் பேச்சாளர் கிரஹாம் பிறாடி தெரிவிக்கிறார்.

கடந்த ஆண்டு நியூஹாமில் தமிழ் மாணவி ஒருத்தி தனது 14வது வயதில் கர்ப்பமடைந்திருந்தார். இம்மாணவியின் உறவினர் ஒருவர் கருத்து வெளியிடுகையில் சிறார்களுக்குப் பாலியல் கல்வி அவசியம் என்றும் ஆனால் அதற்காக அதைச் செய்து பார்க்க வேண்டும் என்று தூண்டும் இது போன்ற ஒரு கல்விமுறை வேண்டவே வேண்டாம் என்றும் தெரிவித்தார்.

Katherine & King's College of London
Minavil House, Ealing Road, Wembley HA0 4EL
* Excellent Location: opposite Alperton Tube Station, good transportation links
* Multi-Disciplines: Accounting, Management, Computer, English
* Various Levels: From Certificate to Degree suitable for anyone over 16.
* Flexible Payment Options: Ten Monthly Instalments
* Diverse Study Modes: Full-time, Part-time (Daytime, Evening, Weekend.)
* Starting Date Available All Year Round
Please call 020-8795 1600 for more.....
Monday – Friday (9am – 6pm)

Boston College of London
The Best College of the year 2002
Certificate, Diploma, Advance Diploma & PGD in
✓ TTH Travel Tourism & Hospitality Management
✓ Business Administration ✓ ACCA, CAT (Accountancy)
✓ Hotel Management ✓ BBA, MBA, BIT, MIT & PhD
✓ Journalism Management ✓ IT
Accredited by the British Accreditation Council for Independent Further and Higher Education
Boston College of London has been named award winner for the year 2002 in the category of International Education & Training by the UK based Leeds & Yorkshire Times in June 2002.
* Small size classes
* Highly qualified lecturers
* Help with visa application & Accommodation
* Airport collection facility
15 Leeland Road, West Ealing, London W13 9HH, UK
Tel: 0044-208-8101888 Fax: 0044-208 8100848
email: info@bcluk.co.uk
Web: www.bcluk.co.uk

"The UDHAYAN" Published by [Global News Media] GNM (PVT) LTD. in London at, I Floor 25-27 High Street Edgware, Middx. HA8 7EE U.K. Tel: 020 8 905 7775 Fax: 020 8952 5677 e-mail: thelondon@udhayan.freeserve.co.uk

# தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் (வீட்டுவரி) Council Tax - £1000 ஐத் தாண்டுகிறது

தமிழ் மக்கள் அதிகம் வாழும் உள்ளாட்சி மன்றங்களில் வீட்டுவரி ரொக்கற் வேகத்தில் உயர்ந்து உள்ளது. இலண்டனில் உள்ள 33 உள்ளாட்சி மன்றங்களிலும் வீட்டுவரி அதிகரித்து இருந்தாலும் தமிழ் மக்கள் அதிகம் வாழும் அத்தனை பகுதிகளிலும் வீட்டுவரி £1000 இலக்கைத் தாண்டி உள்ளது. இவற்றில் தமிழ் மக்கள் மிகவும் செறிந்து வாழும் நியூஹாமே குறைந்த அளவான £1004 உள்ளாட்சி வரியையும் குறிப்பிடத்தக்க அளவு தமிழ் மக்கள் வாழும் கிங்ஸ்ரனே கூடிய உள்ளாட்சி வரியான £1221ஐயும் கொண்டு உள்ளது.

தமிழ் மக்கள் அதிகம் வாழும் உள்ளாட்சி மன்றங்கள் அங்குள்ள மருத்துவமனைகள் கீழ்நிலையிலும் வன்முறைகள் அதிகமாகவும் இருந்த போதும் அதனை முன்னேற்ற அதிகம் முதலீடு செய்யாமல் வரியை மட்டும் அதிகரித்து இருப்பது தமிழர்களிடையே விசனத்தை ஏற்படுத்தி உள்ளது.

இலண்டன் மேயர் கென் லிவிங்ஸ்டனும் தனக்கான பகுதியை £50 ஆல் உயர்த்தி உள்ளார். இதன் படி உள்ளாட்சி வரியில் இருந்து £224.40 அவருக்கு காவல்துறை, தீயணைப்புப் படை, போக்குவரத்து ஆகியவற்றுக்கான செலவுக்காக வழங்கப்படுகிறது.

மேலும் அரசாங்கம் பொருளாதார வளமுடைய உள்ளாட்சி மன்றங்களில் இருந்து வரியைப்பெற்று பின்தங்கிய நிலையில் உள்ள கவுன்சில்களுக்கு அதனைச் செலவிடத் திட்டமிட்டு உள்ளது. இதன்படி பெரும்பாலும் பொருளாதார வளம் செறிந்த தெற்கில் உள்ள ரொறி கவுன்சில்களின் வரியை எடுத்து மத்திய மற்றும் வடக்கு கவுன்சில்களுக்கு வழங்க உள்ளது. இதன்படி தலைநகரில் வீட்டுவரிகள் அதிகரித்த போதும் தலைநகரில் உள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கு அரசாங்கம் வழங்கும் தொகை அதிகரிப்பு சராசரியிலும் குறைவாகவே காணப்படுகிறது. அதாவது சராசரியாக உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்படும் தொகை 5.9 வீதத்தால் அதிகரிக்கப்பட்ட போதும் தலைநகரில் உள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கு 5.2 வீதமான உயர்வே வழங்கப்பட்டு உள்ளது. ஆனால் மத்திய பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு 7.1 வீதம் உயர்வாக வழங்கப்படுகிறது.

## தமிழ் மக்கள் அதிகம் வாழும் கவுன்சில்களும் அங்கு B, D வீடுகளுக்கு விதிக்கப்பட உள்ள சராசரி உள்ளாட்சி வரியும்:

| COUNCIL | 2002/3 | 2003/4 |
|---|---|---|
| Barking | 911 | 1048 |
| Brent | 878 | 1075 |
| Croydon | 854 | 1056 |
| Ealing | 885 | 1125 |
| Enfield | 955 | 1123 |
| Greenwich | 954 | 1044 |
| Haringey | 983 | 1174 |
| Harrow | 1009 | 1206 |
| Hounslow | 1022 | 1176 |
| Kingston | 1060 | 1221 |
| Lewisham | 957 | 1082 |
| Merton | 1018 | 1133 |
| Newham | 885 | 1004 |
| Redbridge | 930 | 1078 |
| Sutton | 955 | 1099 |
| Walthamforest | 979 | 1148 |

### NI contribution அதிகரிக்கிறது

புதிய நிதி ஆண்டு ஆரம்பிக்கும் ஏப்ரல் 1 முதல் NI (National Insurance) contribution ஒரு வீதத்தால் அதிகரிக்க உள்ளது.

# புதிய தொழில் ஒப்பந்தம்

## தமிழ் குடும்ப மருத்துவர்கள் பெருமளவில் பயனடைவர்

பிரித்தானிய மருத்துவ அமைப்பு (British Medical Association) குடும்ப மருத்துவர்களுக்கு (GP - General Practicener) வழங்கப்படும் வேலை ஒப்பந்தத்தில் பாரிய மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. புதிய ஒப்பந்தப்படி கடினமாக உழைக்கும் மருத்துவர்களின் சேவைக்கு ஏற்ப அவர்களுக்கு சம்பளம் வழங்கப்பட உள்ளது. இதன்படி தற்போது சராசரியாக £60,000 பெறும் குடும்ப மருத்துவர்கள் சிறப்பாக கடினமாக உழைத்தால் அவர்களது சம்பளம் £100,000 வரை உயர வாய்ப்பு உண்டு.

இயல்பாகவே கடினமாக உழைக்கும் தமிழ் குடும்ப மருத்துவர்கள் பெருமளவில் நன்மை அடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. நலிவடைந்து கொண்டிருக்கும் தேசிய சுகாதார சேவைக்கு தோள்கொடுக்கும் இலங்கையையும் தமிழகத்தையும் தாயகமாகக் கொண்டுள்ள இம் மருத்துவர்கள் ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்கு தமது சேவையை வழங்கி வருகின்றனர். இருந்த போதும் இது வரை சேவைக்கு ஏற்ப சம்பளம் என்ற நிலை இருக்கவில்லை. ஆனால் இப்புதிய திட்டத்தின் கீழ் சிறப்பான கடினமான சேவையை வழங்க எப்போதும் தயாராக இருக்கும் தமிழ் மருத்துவர்களுக்கு இது வரப்பிரசாதமாக அமைந்து உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அடிப்படை சுகாதர சேவைகளை வழங்குவதுடன் குழந்தைகளுக்கான நோய்எதிர்ப்பு வழங்கல், பெண்ணுறுப்பு இழையப் பரிசோதனை, குடும்பக் கட்டுப்பாட்டு ஆலோசனை வழங்கள் ஆகியவற்றை வழங்குபவர்கள் தம் வருமானத்தை உயர்த்திக் கொள்ளலாம். மேலும் சிறு சத்திரசிகிச்சைகள், போதை மற்றும் மதுபானத்துக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை வழங்கல் போன்றவற்றை மேற்கொள்பவர்கள் அதற்கு ஊக்குவிக்கப்பட உள்ளனர். அரச இலக்கான 48 மணிநேரத்தில் நோயாளியைப் பார்க்க நேரம் கொடுப்பவர்களுக்கும் ஊக்கம் அளிக்கப்பட உள்ளது.

மேற்படி திட்டங்களுக்கு பிரித்தானியாவில் உள்ள 36,000 குடும்ப மருத்துவர்கள் மார்ச்சில் வாக்களிக்க உள்ளனர். அதன் பின்னர் பிரித்தானிய மருத்துவ அமைப்பும் தேசிய சுகாதாரப் பிரிவும் அவ்வுடன்பாட்டை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தும்.

மேலும் புதிய ஒப்பந்தப்படி மருத்துவர்களுக்குப் பதிலாக மருத்துவ நிலையங்களுக்கே வளங்கள் வழங்கப்படும். அதற்கமைய பிரித்தானியாவில் உள்ள 11,000 குடும்ப மருத்துவ நிலையங்கள் எவ்வகையான சேவையை வழங்கப் போகின்றன என அவை முடிவு செய்யும். நீண்டகாலமாக மேலதிக வளங்கள் மருத்துவமனைகளையும் இரண்டாம் நிலையில் இருந்த மருத்துவ சேவைகளையும் குவியப்படுத்தி இருந்தது. ஆனால் தற்போது ஆரம்ப குடும்ப மருத்துவ சேவைகளில் கவனம் எடுக்கப்பட்டு வருகிறது.

## காணாமல் போன தமிழ் பெண் கண்டு பிடிக்கப்பட்டார்

பெப்ரவரி 21ம் திகதி காணாமல் போன அனுஷா நிக்கலா ஜோசப்(23) என்ற தமிழ்ப் பெண் அவருடைய நண்பர் வீட்டில் இருந்துள்ளார் என காவல்துறைச் செய்திகள் தெரிவிக்கின்றன. பெப்ரவரி 21ம் திகதி ஹரோ நகர மையத்தில் இரவு 10 மணியளவில் இறுதியாகக் காணப்பட்ட மார்ச் 4ம் திகதி வரை காணாமல் போயிருந்தார். இவர் அவருடைய நண்பர் வீட்டில் இருந்ததாகத் தெரியவருகிறது. வயதுக்கேற்ற வளர்ச்சி பெறாத அனுஷா ஒரு எப்பிலப்ஸி நோயாளி என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ச்சியான மருத்துவக் கண்காணிப்பில் இருந்ததால் இவர் காணாமல் போனது பற்றி இவரது குடும்பத்தினர் மிகுந்த கவலை அடைந்திருந்தனர்.

வடக்கு ஹரோவில் உள்ள கிங்ஸ்வே கிரசன்ரில் வாழ்ந்த அனுஷா வேறு எப்போதும் இப்படி நடந்து கொண்டதில்லை என அவருடைய குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர். தற்போது அனுஷா அவரது குடும்பத்தினருடன் இணைக்கப்பட்டு உள்ளார்.

* * * *

# மகாஜன மாநாட்டுக்கு இலண்டனில் இருந்து 15 பேர் பயணம்

யாழ் மாவட்டம் தெல்லிப்பளையில் உள்ள மகாஜனக் கல்லூரி மாநாட்டுக்கு இலண்டனில் இருந்து 15 பேர்வரை பயணம் செய்ய உள்ளனர். ஏப்ரல் 19ம் திகதி கொழும்பில் நடைபெறும் இம்மாநாட்டுக்கு பாழைய மாணவர் அமைப்புகளைக் கொண்ட நாடுகள் அனைத்திலும் இருந்தும் உறுப்பினர்கள் கலந்து கொள்ள உள்ளதாக இலண்டன் கிளையின் செயலாளர் கங்காதரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக இலண்டன் பழைய மாணவர் அமைப்புகளுக்கிடையே நடைபெற்றுவரும் முரண்பாடுகள் பிளவுகள் பற்றி அவரிடம் கேட்ட போது தங்கள் அமைப்பு 10 ஆண்டுகளிற்கும் மேலாக சிறப்புடன் நடத்தப்பட்டு வருவதாகவும் அனைவரது நோக்கமும் பாடசாலையை முன்னேற்றுவது தான் அதனால் எந்தப் பிரச்சினையும் எல்லை தாண்டுவதில்லை எனும் வகையில் அவர் தெரிவித்தார். இலங்கையில் நடைபெறும் இம்மாநாட்டை மகாஜனக் கல்லூரியிலேயே வைக்காமல் எதற்காக கொழும்பில் வைக்கிறீர்கள் என்று கேட்ட போது தேவையற்ற சங்கடங்களைத் தவிர்க்கவே அப்படிச் செய்வதாக பதில் வந்தது. பாடசாலையின் தேவைகள் என்ன என்பதை இனம் கண்டு அத்தேவைகளை ஒருங்கிணைப்பதே இம்மாநாட்டின் பிரதான நோக்கம் என கங்காதரன் மேலும் தெரிவித்தார்.

# அநாவசிய விளம்பரங்களுக்குத் தடை

விளம்பரங்களுக்கான புதிய விதிமுறைகளின் கீழ் ஈ-மெயில் மற்றும் ரெக்ஸ்ற் மசேஜ் அனுப்புவதற்கு முன்னர் அதனைப் பெற்றுக் கொள்பவரிடம் அனுமதி பெற வேண்டும். இந்த விதிமுறை பனர் மற்றும் பொப் அப் விளம்பரங்களையும் கட்டுப்படுத்துகிறது. மேலும் மது அருந்துவதால் தனிமையை வெல்ல முடியும் என்று விளம்பரங்கள் கூறுவதற்கும் தடை விதிக்கப்படுகிறது. விளம்பரக் கட்டுப்பாட்டு அதிகாரசபை மேற்படி விதிமுறைகளை அறிமுகப்படுத்துகிறது. மேலும் தபாலிலும் பெருமளவு அநாவசியமான கடிதங்கள் வந்து குவிகின்றன. கடந்த ஆண்டு மட்டும் 10 பில்லியன் அநாவசியமான கடிதங்கள் அனுப்பப்பட்டு உள்ளது. மூன்றில் ஒருவர் இதனை முற்றாகத் தடைசெய்யும்படி கோருவதாக மோரி புள்ளி விபரத் திணைக்களம் தெரிவிக்கிறது.

ALLIED MOTORS U.K.
MECHANICAL & CRASH REPAIRS
Specialists in British, Continental and Japanese Cars.
Servicing, repairs, tuning, insurance work undertaken
Breakdown Service
MOT while you wait
Open: MON - FRI 8.30am to 7.00 pm
SAT 8.30am to 5.00pm
Abbey Estate, Mount Pleasent, Wembley, Middx. HA0 1QT
Tel: 020 8903 5466
Fax: 020 8900 0120

F/h Shop with 2 Bed Flat
CONVENIENT STORE + Off-Licence
POST OFFICE (7 miles from Croydon)
FOR SALE
Takings - 5,000
P.O. Salary - 16,000
£ 230,000
Tel: 01883 343692

Graphical Impact
Signs ~ Designs ~ Graphics
61 Hoe Street, Walthamstow, London E17 4SA
Tel 020 8925 2333 Fax 020 8925 2332
www.graphicalimpact.com

# இந்தத் தமிழ் அமைப்புகள் எல்லாம் என்ன செய்கின்றன - கவுன்சிலர் போல்

ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய ஆசிய நாட்டு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு நாடு திரும்பிய போல் சத்தியநேசன் தமிழ் அகதிகளுக்கு சட்ட ஆலோசனை மற்றும் கல்வி, வேலைவாய்ப்புகளுக்காகவும் வீட்டு வசதி போன்ற புனர்வாழ்வு அம்சங்களுக்காகவும் தமிழ் அமைப்புகளுக்கு வழங்கப்படும் நிதியினால் எந்தப் பலனும் கிடைக்கவில்லை எனக் குற்றம்சாட்டி உள்ளார். பெப்ரவரி 28ல் இல்போர்ட்டில் 700க்கும் மேற்பட்ட அகதிகள் மத்தியில் கவுன்சிலர் போல் இக்கருத்தை வெளியிட்டார். மக்களுடன் மக்களாக இணைந்து செயற்படும் இக்கவுன்சிலர் நியூ□ாம் பகுதியில் மிகக் கூடுதலான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. வெளிப்படையாக தனது கருத்துக்களை முன் வைக்கும் இவர் பிபிசி நியுஸ் நைற் நிகழ்ச்சியில் இளைஞர்களின் வன்முறையை மிகக் கடுமையாக விமர்சித்ததுடன் வன்முறையாளர்கள் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்றும் கோரியிருந்தார். இளைஞர்களின் வன்முறைக்குப் பயந்து தமிழ் அமைப்புகளும் அதன் தலைவர்களும் மௌனம் சாதித்த போது கவுன்சிலர் போல் மேற்கொண்ட அந்த முயற்சி தலைநகரில் சமாதான வாழ்வை விரும்பும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களால் பாராட்டப்பட்டது.

சமாதானத்தை முழு மனதுடன் வரவேற்பதாகவும் ஆனால் நிலையான சமாதானம் ஏற்படும் வரை பலவந்தமாக யாரையும் அனுப்புவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அகதிகளின் வாழ்வுரிமைக்காக நடத்தப்பட்ட அக்கூட்டத்தில் அவர் தெரிவித்தார். இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுபவர்கள் ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தின் மீளக்குடிய மர்த்தல் திட்டத்தின் கீழேயே அனுப்பப்பட வேண்டும் என்று குறிப்பிட்ட போல் சத்தியநேசன் அதுவே அகதிகளுக்கு பாதுகாப்பானது எனத் தெரிவித்தார்.

தமிழ் அமைப்புகளின் அசமந்த போக்குகள் பற்றி கண்டணம் தெரிவித்த போல் சத்தியநேசன் தமிழர் நலன்களுக்காக அரசு மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் 2.5 மில்லியன் பவுணுக்கு மேல் ஒதுக்கி உள்ளன (TCHA - 1,192,000; TR-TEC - 420,000; TRC - 410,00 ), அதனால் தமிழ் மக்கள் பெற்றுக் கொண்ட பலன் என்ன எனக் கேள்வி எழுப்பினார். மற்றுமொரு கூட்டத்தில் இந்த தமிழ் பொது அமைப்புகள் மக்களின் நம்பிக்கையை இழந்து விட்டதாகக் குறிப்பிட்ட போல் இவ்வமைப்புகள் மக்களுக்கு தம் கணக்குப் பற்றிய முழுவிபரங்களையும் வெளியிட வேண்டும் என்று தெரிவித்திருந்தார். அதனால் அவர் சில எதிர்ப்புகளை எதிர் நோக்கியதாக அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலண்டனில் தமிழ் அகதிகளுடன் சம்பந்தப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட அமைப்புகள் இருந்தும் அனைவராலும் கைவிடப்பட்ட நிலையில் இறுதிப் போராட்டத்துக்கு தயாராகும் இந்த தஞ்சம் மறுக்கப்பட்டவர்களுக்காகக் குரல் கொடுக்க அல்லது குரல் கொடுப்பவர்களுக்கு ஒத்துழைக்க யாரும் முன்வராததையிட்டு அவர் தன் மனவருத்தத்தை வெளியிட்டார். இவர்களும் சம்பளத்துக்காக மட்டும் பணியாற்றும் சராசரிகள் என்ற வகையில் போல் சத்தியநேசனின் பேச்சு அமைந்தது.

தடுத்து வைப்பதையும் திருப்பி அனுப்புவதையும் நிறுத்தக் கோரி கவுன்சிலர் போல் சத்தியநேசனின் தலைமையில் நடத்தப்பட்ட கையெழுத்துப் போராட்டத்தின் அடுத்த படியாக இப்போராட்டம் அமைந்து உள்ளது. பாதிக்கப்பட்டவர்களும் அவர்களின் நலனில் அக்கறை கொண்டவர்களும் முன்வந்து இப்போராட்டத்தில் ஈடுபடுவதில் தான் இப்போராட்டத்தின் வெற்றி தங்கி உள்ளது என அங்கு வந்திருந்த அகதிகள் நிறுவன அலுவலர் எ கெ ராஜா தெரிவிக்கிறார்.

தனது பயண அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட கவுன்சிலர் போல் யாழ்ப்பாணத்தில் திருப்பி அனுப்பப்படுவது பற்றி கேள்வி எழுப்பிய பத்திரிகையாளர் வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் கொலையாளிகளா? எய்ட்ஸ் உடையவர்களா? மோசடியாளர்களா? எனக் கேட்டதாகவும் அந்தக் கேள்வியில் இருந்து புலம்பெயர்ந்தவர்கள் பற்றி தாயகத்தில் என்ன நினைக்கிறார்கள் என்பது தெரியவந்ததாகக் குறிப்பிட்டார். மக்கள் தற்போதுள்ள சமாதானம் தொடர்ந்து நிலைக்க விரும்புவதாகவும் நிரந்தர சமாதானமாக இது மாற வேண்டும் என்றே மக்கள் பிரார்த்திப்பதாகவும் போல் அக்கூட்டத்தில் தெரிவித்தார். சிங்கப்பூர், மலேசிய நாடுகளில் தனக்குக் கிடைத்த வரவேற்புப் பற்றி உதயன் நிருபருக்குத் தெரிவித்த அவர் எமது சகோதரர்கள் என்ற ஒரு உணர்வை அது ஊட்டியதாகக் குறிப்பிட்டார்.

TRICO SHIPPING WORLDWIDE
Small cartons and large container
Full House packing and shipping to any destination of your choice.
Special Rates:- COUCHIN, TREVENDRAM BOMBAY - CHENNAI
* Two regular shipments to Colombo per month
* Goods arrive within 17days
20 YEARS IN SERVICE
Call us for a friendly personal service
Tel: 020 8888 8787
Fax: 020 8888 5445
E-mail: trico@btclick.com
UNIT 4 - BUILDING C BUSINESS CENTRE, CLARENDON ROAD, WOODGREEN, LONDON N22 6XJ

Panesar Electrical Co.
EST 1981
மலிவு விற்பனை
12V LV Lamps 20W/35W/50W
Buy 10 for £10.00 and get 2 free!
12W Split Load Consumer Unit RCD + Main Switch 8 MCBs
Only £85.95
Mains Spotlight C/W 3x 50w Lamps
Only £23.95!
Chrome, Brass or White
Xpelair DX100T 4" Timer Fan C/W Wall + Window Kit
Only £22.95!
While Stocks Last!
OFFERS ONLY AVAILABLE WITH THIS ADVERT
ALL PRICES INCLUDE VAT
364 High Street North, Manor Park, London E12 6PH
Tel: (020) 8472 1873, Fax: (020) 8471 6271

SiGN FiT
The Company of Dynamic Ideas.
Specialist in Illuminated, Non-Illuminated, Menu System & Menu Photos.
Challenge: We will beat any Price.
Best Deal Best Design Best Service
Tel:020 8552 1194
Fax:020 8548 1047 Mob:07956 274762
482 Barking Road, East Ham London E6 2LT
Web: www.signfituk.com E-mail: sales@signfituk.com

பிறந்தநாள் மற்றும் சிறு விளம்பரங்களுக்கு 020 8952 5677


FUNTASIA
The Party Shop
BALLOON PRINTING
BALLOON DECORATING
HELIUM HIRE
PARTY WARE & NOVELTIES
BRIDAL FAVOURS
SOFT TOYS
FANCY DRESS, WIGS, MASKS
JOKES & MAKE-UP
ADULT JOKES & NOVELTIES
PERSONALISED NAPKINS
AND BOOK MATCHES.
RUBBER STAMPS SERVICES
சகலவிதமான வைபவங்களுக்கும் தேவையான அலங்கார சோடனைகளுக்கு நாடுங்கள் Funtasia
229 KENTON ROAD, KENTON, HARROW, MIDDLESEX HA3 0HD
Tel/Fax: 020-8907 1333 www.FuntasiaWorld.com

# தஞ்சம் கோருவோர் குடியிருப்பில் ஹரோ கவுன்சில்

அரசாங்கத்தின் பரவலாக்கல் திட்டத்தில் கிளாஸ்கோவிற்கு அனுப்பப்பட்ட அகதிகள் அவர்களுக்கு நிரந்தர வதிவிடம் வழங்கப்பட்டதும் மீண்டும் தாங்கள் இருந்த ஹரோ கவுன்சிலுக்கே வர உள்ளனர். அப்கானில் இருந்து தஞ்சம் கொரிய திருமதி ஒஸ்மானி குடும்பம் அரசின் பரவலாக்கல் திட்டத்தின் கீழ் கிளாஸ்கோவில் குடியமர்த்தப்பட்டது. திருமதி ஒஸ்மானி குடும்பத்தினருக்கு மே 2001ல் நிரந்தர வதிவிட உரிமை வழங்கப்பட்டது. அதே ஆண்டு அவர் ஹரோ கவுன்சில் வீட்டுக்கு விண்ணப்பித்து இருந்தார். அவ்விண்ணப்பத்தை நிராகரித்த அக்கவுன்சில் அவர்கள் கிளாஸ்கோ கவுன்சிலில் இருந்ததால் ஹரோவில் வீடு வழங்க முடியாது என மறுத்தனர்.

அதனை அடுத்து நீதிமன்றம் வந்த இந்த விவகாரத்தில் தீர்ப்பு வழங்கிய நீதவான் சாய்மன் பிறவுன், அரசாங்கத்தின் பரவலாக்கல் திட்டத்தில் கிளாஸ்கோவில் குடியமர்த்தப்பட்டவர்கள் தங்கள் சொந்த விருப்பத்தில் அங்கு செல்வதில்லை என்றும் அவர்களுக்கு வேறு வழியில்லாமலேயே விருப்பத்திற்கு மாறாகச் செல்ல வேண்டி இருப்பதாகவும் தெரிவித்தார். அதனால் அவர்கள் தஞ்ச விசாரணைக் காலகட்டத்தில் பரவலாக்கல் திட்டத்திம் மூலம் எங்கு இருந்தாலும் வதிவிட உரிமை வழங்கப்பட்டதும் அவர்கள் இலண்டனுக்கு வர முடியும் என அத்தீர்ப்பு அமைந்தது.

# அழகி - சிறந்த படமாகத் தேர்வு

ஐரோப்பியத் திரைப்படக் கழகம் நடத்திய ஐரோப்பிய குறும்பட விழா நிகழ்ச்சிகள் சிறப்பாக அமைந்ததாக ஏற்பாட்டாளர் அஜீவன் உதயனுக்குத் தெரிவித்தார். சுவிற்சர்லாந்தின் ஓல்ட்ன் - தூலிக்கன் பகுதியில் நடை பெற்ற முதல் திரைப்பட விழாவாக ஐரோப்பிய குறும்பட விழா கடந்த 2003 பெப்ரவரி 15ம் நடைபெற்றது. இவ்விழாவுக்கு பல நாடுகளிலிருந்தும் 60க்கும் மேற்பட்ட குறும் படங்கள் வந்திருந்ததாக இயக்குநர் அஜீவன் குறிப்பிட்டார். அவற்றில் இறுதித் தேர்வுக்காக 19 குறும் படங்கள் தேர்வு செய்யப்பட்டு திரையிடப்பட்டதுடன் நிகழ்சியின் இறுதியில் சுவிஸ் திரைப்பட சம்மேளனத்தின் 8 நடுவர்களால் தீர்மானிக்கப்பட்ட முடிவுகளும் மக்களது அன்றைய ரசனையாக தேர்வான ஒரு படத்தின் முடிவும் அறிவிக்கப்பட்டது. இது தவிர 2002 ம் ஆண்டின் சிறந்த யதார்த்த முழு நீள சினிமாவுக்கான விருது தங்கர்பச்சான் இயக்கிய அழகி திரைப் படத்துக்கு வழங்கப்பட்டது.

# நோபல் சமாதானப் பரிசு

அரசியல் ஆய்வாளர் பேராசிரியர் கோபன் மகாதேவா தனது ஆய்வில் ஏழாங் கட்டப் பேச்சுவார்த்தைகளை ஏன் அமெரிக்காவிலேயே வைக்கக்கூடாது எனக் கேள்வி எழுப்பி உள்ளதுடன் தீர்க்கதரிசனமும் தன்னலமற்ற தியாகமும் பிரயாசையும் கொண்ட ரணில் விக்கிரமசிங்க, வேலுப்பிள்ளை பிரபாகரன், லக்ஷ்மன் பீறிஸ், அன்டன் பாலசிங்கம், நோர்வேயின் அரசு ஆகிய இந்த ஐம்பெருந் தலைவர்களுக்கும் 2005இல், சமாதான சேவைக்குரிய அகிலவுலக நோபல்பரிசு கட்டாயம் கிடைக்கும் என எதிர்வு கூறி உள்ளார். பேராசிரியர் கோபன் மகாதேவா தனது அரசியல் ஆய்வை ஈழத்து அரசியல் படுகொலையின் அடுத்த அடி என்ன என்ற தலைப்பில் எழுதி இருந்தார். அந்த ஆய்விலேயே அவர் இவற்றைக் குறிப்பிட்டார்.

# வரலாறு தெரியாமல் எழுதாதீர்கள்

வரலாறு குத்துமதிப்பாக எழுதப்படும் ஒன்றல்ல என்று குறிப்பிட்ட அப்பால் தமிழ் தள நெறியாளர் கி பி அரவிந்தன் எஸ் கெ காசிலிங்கத்தின் என்னுள் என்னோடு என்ற நூலை ஆய்வு செய்த போதே இக்கருத்தை வெளிப்படுத்தினார். நூலின் இரு பக்கங்களில் உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டி நூலின் நம்பகத்தன்மையையும் அணிந்துரை வழங்கியவர்களின் பொறுப்பற்ற தன்மையையும் அரவிந்தன் காரசாரமாக விமர்சித்து உள்ளார். அவர் தனது திறனாய்வின் இறுதியில் வரலாறு போகின்ற போக்கில் குத்துமதிப்பாக எழுதப்படும் ஒன்றல்ல என்பதை காசிலிங்கமும் அவருக்கு புகழ்மாலை சாத்தியவர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

# விடை தெரியாத அரசியல் கைதிகளின் விடுதலை

இலங்கையில் சமாதானத்துக்கான பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு ஓர் ஆண்டு பூர்த்தியான நிலையிலும் சிறையில் வாழும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசியல் கைதிகளின் விடுதலை இன்னமும் கேள்விக்குறியாகவே உள்ளது. இலங்கைச் சிறைகளில் 1,500 பேர் வரையான அரசியற் கைதிகளும் தமிழகத்தில் உள்ள சிறப்பு முகாம்களில் 300 வரையான அரசியற் கைதிகளும் கடந்த பல ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர். இவர்களுடைய விடுதலை துரிதப்படுத்தப்பட வேண்டும் என்றும் தமிழகத்தில் உள்ள சிறப்பு முகாம்கள் மூடப்பட வேண்டும் என்றும் அகதிகள் புனர்வாழ்வு மற்றும் மனித உரிமை இயக்கம் - Movement for Refugee Rehabilitation and Human Rights, கேட்டு உள்ளது. இவர்களின் விடுதலைக்கு அனைத்துத் தமிழ் மக்களும் குரல் கொடுக்க வேண்டும் என இவ்வமைப்பின் இலண்டன் பொறுப்பாளர் சி பாலச்சந்திரன் (பாலன்) உதயனுக்குத் தெரிவித்தார்.

சிறப்பு முகாம்களில் 1991 மதல் 1998 வரை தடுத்து வைக்கப்பட்டிருந்த பாலன் தமிழக மக்களின் தொடர்ச்சியான போராட்டத்தாலும் சட்ட நடவடிக்கைகளாலும் தான் விடுதலை பெற்றதாகவும் அதற்காக அம்மக்களுக்கு தான் என்றும் கடமைப்பட்டு உள்ளதாகவும் உணர்ச்சி பூர்வமாக பதிலளித்தார். தமிழகம் ஏறத்தாள 200,000 தமிழர்களுக்கு இன்றும் அடைக்கலம் அளித்து வருவதை நினைவுபடுத்திய அவர் சிறப்பு முகாம்களில் உள்ளவர்கள் சிலர் விமானக் கட்டணத்தைச் செலுத்த வசதியில்லாததால் தொடர்ந்தும் அங்கு இருக்க வேண்டி இருப்பதாகக் குறிப்பிட்டார்.

தமிழக அரசியல் கட்சிகளின் ஏட்டா போட்டிக்குள் சிக்குண்டு நீதி விசாரணையின்றி 8 ஆண்டுகள் தடுத்து வைக்கப்பட்டதாகக் குறிப்பிட்ட பாலன் அந்த நிலையில் உள்ள ஏனையவர்களையும் விடுதலை செய்வதற்காக பாடுபட்டு வருவதாகவும் குறிப்பிட்டார். ஏற்கனவே சிறப்பு முகாம்களில் உள்ள சிலர் விடுதலை பெற்று வந்து இலண்டனில் அரசியல் தஞ்சம் கோரி உள்ளனர். அவர்கள் தமது சக நண்பர்களையும் விடுவிக்க உதவ முடியும் என நம்பிக்கை வெளியிட்டார். இவ்விடயத்தில் ஆர்வம் உடையவர்கள் அகதிகள் புனர்வாழ்வு மற்றும் மனித உரிமைகளுக்கான இயக்கப் பொறுப்பாளர் பாலனை இவ்விலக்கத்துடன் (077 5346 5573) தொடர்பு கொள்ள முடியும்.

# அகதிகள் நிலை அடுத்த கட்டம் என்ன?

அகதிகள் விவகாரம் தொடர்பாக அடுத்து என்ன உத்தேசித்து உள்ளீர்கள் என்று எமது நிருபர் கேட்ட கேள்விக்குப் CDSTAS (Committe to Defend Sri Lankan Tamil Assylum Seekers) குழுப் பேச்சாளர் போல் சத்தியநேசன் பதிலளிக்கையில் மார்ச் முதல் வாரம் கூடி சில திட்டமிடல்களை மேற்கொண்டதாகக் குறிப்பிட்டார். அதன்படி புலம்பெயர்ந்த தமிழ் வர்த்தகர்களையும் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சட்ட நிறுவனங்களையும் வரவழைத்து சந்திக்க இருப்பதாக அவர் தெரிவித்தார். இந்த தஞ்சம் மறுக்கப்பட்டவர்கள் விடயத்தை போராட்டமாக முன்னெடுக்க எமக்கு பலதரப்பினரதும் ஒத்துழைப்பு வேண்டும் அதற்கு புலம்பெயர்ந்த அனைவரும் தங்கள் ஆதரவை வழங்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

அகதிகள் விடயம் சம்பந்தமாக பாராளுமன்றத்தின் இலங்கை விவகாரத்துக்கான அனைத்துக் கட்சி உறுப்பினர்கள், பிரித்தானிய அகதிகள் அமைப்பு, நோர்வே அரசப் பிரதிநிதி ஆகியோருடன் சந்திப்புகளை ஏற்படுத்தத் திட்டமிட்டு இருப்பதாகவும் அப்பேச்சாளர் தெரிவித்தார். இவற்றின் இறுதியில் பாராளுமன்றத்தில் ஒரு எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்ள இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அகதிகளைத் திருப்பி அனுப்புவதை நாங்கள் நிறுத்த முடியாது எனத் தெரிவித்த அப்பேச்சாளர் தற்போதுள்ள நிலையில் அவர்களைத் திருப்பி அனுப்ப முடியாது என்றும் அதனால் திருப்பி அனுப்புவதைத் தாமதிக்கும் படியே கேட்பதாகவும் தெரிவித்தார். மேலும் தாங்களாக விரும்பப்பட்டு நாடு திரும்புபவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளையும் உதவிகளையும் தாங்கள் செய்ய உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இவ்வமைப்புக்கான அலுவலகம் திறக்கப்பட்டதும் இந்த வேலைகள் துரிதப்படுத்தப்படும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

# சட்டத்தரணி திரு ரங்கன் பதிலளிக்கிறார்

திருமாறன் - TR-TEC வழக்கில் திருமாறனைப் பிரதிநிதித்துவப்படுத்திய சட்டத்தரணி திரு ரங்கன் அவர்களை அவ்வழக்குப் பற்றி சந்தித்து சில தகவல்களைப் பெற்றுக் கொண்டோம். £35,500 மேல் செலவான இவ்விடயத்தை TR-TEC அமைப்பிற்குள்ளேயே வைத்துத் தீர்க்க முடியாமல் போனதற்கு என்ன காரணம்? என்று கேட்ட கேள்விக்கு ரங்கன் வழக்குத் தொடரப்படாமல் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வழிகள் இருந்தும் TR-TEC நிர்வாகமோ முகாமைத்துவமோ அதற்கு முன் வரவில்லை என்று தெரிவித்தார். TR-TEC சார்பில் சாட்சியமளித்த சிறிதரன், ரகுநாதன் ஆகியோர் சத்தியப்பிரமாணம் எடுத்து விட்டு பொய்ச் சாட்சியம் அளித்ததாக நீதி மன்றம் கண்டுள்ளதா? என்ற கேள்விக்கு ரங்கன் பதிலளிக்கையில் நான் சொல்வதானால் அவர்கள் சொன்னதை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனை Finding of Fact என்பார்கள். பொய்ச்சாட்சியம் என்பது உய்துணரப்படுகிறது. அதாவது பிற்திகதியிடப்பட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்து வாங்கி விட்டு திருமாறனை வேலையில் இருந்து நீக்கி உள்ளார்கள் எனத் தெரிவித்தார்.

இவ்வழக்குப் பற்றி சட்டத்தரணி ரங்கனுக்கும் திருமாறனுக்கும் எதிரான அரசியல் சாயம் பூசும் பிரச்சாரம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. மேலும் தமிழ் அமைப்பு ஒன்றுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் சில அபிப்பிராயங்கள் நிலவின. அதை அறியும் வகையில் தமிழ் சமூக அமைப்பு ஒன்றுக்கு எதிராக சட்ட நடவடிக்லை எடுக்க வேண்டி உள்ளது என்று நீங்கள் மனவருத்தப்படவில்லையா? என்று திரு ரங்கனிடம் கேட்கப்பட்ட போது TR-TEC அமைப்போ அல்லது மற்றைய அமைப்புகளோ இந்த தமிழ் என்ற ஆயுதத்தை பயன்படுத்துவது மோசடியானது. உதாரணமாகத் தமிழ் தானே தமிழ் தமிழுக்கு எதிராகப் போகக் கூடாது என்று கூறும் இந்த அமைப்புகள் எல்லாம் அப்படிப் பார்கிறதா. TR-TECல் வேலை செய்த திருமாறனும் ஒரு தமிழ் ஆள் தானே. ஒரு வகையில் பார்த்தால் திருமாறனுக்கு அந்த அநியாயம் இழைக்கப்பட்டதே அவர் தமிழ் ஆள் என்றதால் தான் எனத் தெரிவித்தார்.

வழக்கின் தீர்ப்பில் மிகவும் திருப்தி அடைந்ததாகக் குறிப்பிட்ட TR-TEC முன்னாள் செயலாளர் ஜீவரட்ணம் சம்பந்தப்பட்ட முகாமைத்துவ உறுப்பினர்கள் மீது அறக்கட்டளை ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தற்போதுள்ள அறக்கட்டளை நிர்வாகம் கலைக்கப்பட்டு புதிய நிர்வாகம் உருவாக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது தெரிந்ததே.

# எய்ட்ஸ் அபாய எச்சரிக்கை

எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை விரைவில் 40 மில்லியனை எட்ட உள்ளது. இந்நோயினால் ஏற்கனவே 28 மில்லியன் பேர் கொல்லப்பட்டு உள்ளனர். தற்போதுள்ள நிலையில் எய்ட்ஸ் பரவினால் 2010ல் 2010ல் 25 மில்லியன் எய்ட்ஸினால் பாதிக்கப்பட்ட அனாதைக் குழந்தைகள் இருப்பார்கள் என மதிப்பிடப்பட்டு உள்ளது. ஒவ்வொரு நிமிடமும் ஆபிரிக்காவில் ஐவர் எய்ட்ஸ் நோயினால் மரணமடைகின்றனர். இந்தியாவில் 20 - 25 மில்லியன் பேர் இந்நோய்க்கு ஆளாவார்கள் என அமெரிக்கப் புலனாய்வுத்துறை மதிப்பிட்டு உள்ளது. இலங்கையில் 7,200 பேர் இந்நோய்க்கு ஆளாகி இருப்பதாக மதிப்பிடப்பட்டு உள்ளது.

# போரைத் தாங்காத அமெரிக்கப் பொருளாதாரம்

எண்ணைக்கான யுத்தம் என வர்ணிக்கப்படும் அமெரிக்காவின் ஈராக் மீதான யுத்தம் அமெரிக்கப் பொருளாதாரத்தை மிகவும் பலவீனப்படுத்தும் என எச்சரிக்கப்படுகிறது. US $2.7 trillion dollar கடனில் உள்ள பொருளாதாரம் பழைய ஐரோப்பாவை நம்பியே இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. தற்போதைய ஈராக் நிலவரத்தில் பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யாவுடன் ஏற்பட்டு உள்ள இப்பிளவு அமெரிக்கப் பொருளாதாரத்தை மேலும் பலவீனப்படுத்தும் என எதிர்வு கூறப்பட்டு உள்ளது. ஏனைய உலக நாடுகளிடம் கடன்பட்டுள்ள அமெரிக்கா பங்குகளை வாங்க வைப்பதன் மூலம் தன்னை தக்க வைத்துக் கொண்டுள்ளது. யுத்தம் நடைபெறும் போது பங்குகளை அனைவரும் விற்க முற்படுவார்கள். அந்நிலையில் டொலரின் மதிப்பு நொருங்கலாம் எனவும் எதிர்வு கூறப்பட்டு உள்ளது.

# தஞ்சம் அதிகரிப்பு

பிரித்தானியாவில் தஞ்சம் கோரியவர்களின் எண்ணிக்கை 110,000க்கும் மேலாக அதிகரித்து உள்ளது. மற்றைய ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் கோருவோரின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்து கொண்டிருக்கும் நிலையில் பிரித்தானியாவில் இந்நிலை எதிர்மறையாக இருப்பது உள்துறை அமைச்சர் டேவிட் பிளங்கெற்றுக்கு மிகுந்த நெருக்கடியைக் கொடுத்து உள்ளது. இப்புள்ளி விபரம் வெளியிடப்பட்டதை அடுத்து வலதுசாரிப் பத்திரிகைகள் தஞ்சம் கோருவோருக்கு எதிரான தமது பிரச்சாரப் பீரங்கிகளை முடுக்கி விட்டு உள்ளன.

DISCOUNT CARPETS & FURNITURE
* Large selection of Carpets, Vinyl, Beds & Wood Flooring
* Unbeatable Warehouse Prices To the Public
* Call us on
020 8838 4232 / 4248
Fax: 020 8838 4233
Unit C Corner of Bashley Road & St. Leonards Road
Park Royal, London NW10 6ST

MALIK DOUBLE GLAZING LTD
Manufacturers, Suppliers & Installers of Double Glazing, UPVC and Aluminium Windows, Doors, Patio Doors & Porches
Trade & Retail Welcome

020 8459 8811
www.malikdoubleglazing.co.uk Fax: 020 8459 8844
202 Church Road, Willesden, London NW10 9NP

KUDOS CONTRACT FURNITURE
Quality furniture to suit your budget
Single Bed From £49.95
Double Bed From £79.95
BARGAIN PRICES
Call us on
020 8893 6192
07887720960
357, Uxbridge Road, Southall

FURNITURE KING
SPECIAL OPENING OFFERS
LIMITED STOCK BUY NOW!
3pc SUITE Ex Display From £249.99
Table + 4 Chairs From £99.99
Pine Wardrobes £99.99
Pine 5+2 Chest + much much more £79.99
Single Beds £39.99
Double Beds £99.99
Many Special Lines
Call us on 020 8931 8686
BELMONT CIRCLE, HARROW
Fax: 020 8931 8685

QUALITY RIGID KITCHENS
Suppy Only or Suppy & Fit
* Replacement Doors available any size
* Made to measure Bedrooms
* All makes of Appliances
* Trade account welcome

HEATHROW KITCHENS
140 UXBRIDGE ROAD, HAYES
FAX: 020 8581 1005
020 8813 6952

# UNBEATABLE PRICES

*** TILES * MARBLE * GRANITE * KITCHENS * BATHROOM * WOODFLOORING * FURNITURE**

**MASSIVE SALE**




**MASSIVE SALE**

# ELITE

ELITE TILES are undeniably UK's No.1
Importers, Distributors, Wholesalers and Retailers
of




*Specialists in Granite Worktops and Marble Vanity Tops to order*




## £2 MILLION POUNDS OF AVAILABLE STOCK TO CLEAR

**(collect same day)**

Web Site: www.elite-tiles.co.uk

**020 8202 1806 (12 lines)**
**020 8202 8608 (Fax)**
**Elite House, The Broadway,**
**West Hendon, London, NW9 7BP**

Open Mon-Fri 8.30am-6pm – Sat 10am-5pm – Sun 10am – 2pm

# கத்தி முனையில் பிரித்தானியப் பொருளாதாரம்

பிரித்தானிய பொருளாதாரம் வளரும் வேகத்திலும் மிக மிக வேகமாக நுகர்வோரின் கடன் தொகை அதிகரிப்பதாக பொருளியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது நுகர்வோரின் கடன் தொகை £900 பில்லியனாக உள்ளதாக மதிப்பிடப்பட்டு உள்ளது. ஒரு கட்டத்தில் பொருளாதாரமும் கடனும் ஒரு கோட்டுக்கு வரவேண்டும் என்று குறிப்பிடும் ஆய்வாளர்கள் அதற்கு நுகர்வோர் கடனில் வீழ்ச்சி ஏற்பட வேண்டும் என்கின்றனர். அதற்கு வட்டிவீதம் அதிகரிக்கப்படலாம் வரி அதிகரிக்கப்படலாம் கடன் வழங்குவதற்கான கட்டுப்பாடுகள் இறுக்கப்படலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆனால் வர்த்தகம் அதிகரிக்கும் என்ற நம்பிக்கையில் நிறுவனங்கள் வேலைக்கு ஆட்களைக் கொண்டுள்ளன. ஆனால் அப்படி நடக்காத பட்சத்தில் பெருமளவு வேலை நீக்கங்கள் இடம்பெறும். அதனால் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலை நுகர்வோருக்கு ஏற்படலாம். இது பொருளாதாரச் சரிவுக்கும் இட்டுச் செல்லலாம் என அந்நிபுணர்கள் அச்சம் தெரிவித்து உள்ளனர்.

இந்து தகவல் ஏடு
இரண்டாம் வெளியீடு 2003
மிக அதிக புதிய விளக்கங்களுடன்
விரைவில் வெளிவருகிறது

கண்ணியமான நல்ல நோக்குடன் வெளிவரும் இந்த இந்து சமய தகவல் ஏட்டினை ஒவ்வொருவரும் விரைந்து சென்று பெற்றிடுவீர்
இலவசம்
இலவசம்
இலவசம்

16 Minerva Road
Park Royal
London NW10 6HJ UK
Shiv Souvenirs Ltd
Importers and Wholesale Distributors
Fancy Goods TOYS
gifts Souvenirs
and many more
Tel: 020 8963 0512/3
Fax: 020 8963 0518
Email:shivsouvenirs@aol.com

BEST TRADE CENTRE
Need a Car ?
Can't get finance ?
WE CAN HELP
No Deposit - Drive away
TODAY in
one of our great cars
NO Application Refused
CALL
020 8514 0988
763 Romford Road, Manor Park E12
Email: info@besttradecentre.co.uk

Triangle
Cars & Couriers
348 a High Road
Wembley
Middlesex
HA9 6AZ
24 Hour
Radio Control
Tel 020 8902 8888
Tel 020 8795 1414
Fax 020 8795 1313


Hardwood & Laminate Flooring Centre
3 Ply Flooring
13.99+VAT
Quality
Floor
at
Competitive
Price
at
Hardwood
&
Laminate
Flooring
Centre
306 Honeypot Lane
Stanmore
020 8204 2333

# இலண்டனைத் தாக்க நேபாளில் திட்டம்

நேபாளில் பிடிக்கப்பட்ட 28 பாகிஸ்தானியர்களிடமிருந்து இலண்டன் நிலக்கீழ் புகையிரத வரைபடம், நேட்டோ தளங்கள் பற்றிய வரைபடங்கள் ஆகியன மீட்கப்பட்டு உள்ளன. பெப்ரவரி முற்பகுதியில் நேபாள் பொலிஸிற்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே இவர்கள் தங்கியிருந்த கட்டிடம் சோதணையிடப்பட்டது. கட்டிடத்தை சோதணையிட்ட பொலிஸார் அங்கு போதைப்பொருள் மற்றும் விபச்சாரம் போன்றவற்றையே எதிர்பார்த்துச் சென்றனர். நேபாள் பொலிஸாரின் தகவலின் படி கைது செய்யப்பட்டவர்கள் நேட்டோ பாதுகாப்புப் பிரிவின் தலைமை அதிகாரி அட்மிரல் ஜெனரல் சேர் மைக்கல் போய்ஸின் படத்தை வைத்திருந்ததாகவும் அவரைப் படுகொலை செய்ய அவர்கள் திட்டமிட்டு இருந்ததாக நம்புவதாகவும் தெரியவருகிறது. அத்தலைமை அதிகாரி மார்ச்சில் நேபாள் வருவதாக இருந்தார். பிரித்தானிய, இத்தாலிய உளவு ஸ்தாபனங்கள் பிடிபட்ட பாகிஸ்தானியர்களுக்கும் அல்கேடா அமைப்பிற்கும் தொடர்பு இருப்பதாக உறுதிப்படுத்தி உள்ளன.

# கைதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் குறித்த மக்கள் தொகைக்கு இங்கிலாந்திலும் வேல்ஸிலுமே அதிக அளவு கைதிகள் இருப்பதாக உள்துறை அமைச்சு பெப்ரவரி 26ல் வெளியிட்ட புள்ளி விபரம் தெரிவிக்கிறது. 100,000 மக்கள் தொகைக்கு 139 பேர் என்ற வீதத்தில் கைதிகள் காணப்படுவதாகவும் மொத்தமாக 72,000 பேர் சிறைகளில் அடைக்கப்பட்டு உள்ளதாகவும் அப்புள்ளி விபரம் தெரிவிக்கிறது. மேலும் இக்கைதிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் எச்சரிக்கப்பட்டு உள்ளது. நாட்டின் மக்கள் தொகையில் 8 வீதமே உள்ள சிறுபான்மையினர் மொத்தக் கைதிகளில் கால்பங்கினராக உள்ளனர். குறிப்பாக இலண்டனைச் சுற்றி உள்ள புறநகர்ப் பகுதிகளில் வாழும் தமிழர்களின் எண்ணிக்கை 150,000 வரை உள்ளது. ஆனால் 2000 முதல் 2002 காலகட்டத்தில் 200க்கு மேற்பட்ட குற்றச் செயல்கள் பதிவு செய்யப்பட்டு இருந்தது. பதிவு செய்யப்படாத குற்றச் செயல்களையும் சேர்த்தால் அது மிகவும் அதிகம் என ஸ்கொட்லன்ட் யாட் அதிகாரி ரிச்சட் பிறயன் உதயனுக்குத் தெரிவித்து இருந்தார்.

100,000 மக்களுக்கு எத்தனை கைதிகள் என்று பார்க்கப்படும் போது மேற்கு ஐரோப்பாவில் பிரித்தானியாவிலேயே அதிக கைதிகள் உள்ளனர். அயர்லாந்தில் அம்மக்கள் தொகைக்கு 86 கைதிகளே உள்ளனர். மாறாக அமெரிக்காவில் 100,000 பேருக்கு 686 கைதிகள் உள்ளனர்.

Service Value Quality
Euro Glazing
Windows, Doors, Porches, Conservatories
உயர்ந்த தரம், நிறைந்த சேவை மற்றும் மிகுந்த சேமிப்புக்கு நாடுங்கள்
020 8574 9494

We give guarantee for our quality products ranges we supply.
Our professional staffs is highly skilled to fit Windows, Doors, Porches, Conservatories...
Just one call away to make your home complete
Euro Glazing Ltd.
Unit 7, Barrett Industrial Park, Park Avenue, Southall, Middlesex, UB1 3AF
Tel: 020 8574 9494 Fax: 020 8574 8989

# நூல் வாசிப்பு

ரொமேஸ் குணசேகரவுடைய நூல் வாசிப்பு மார்ச் 7ம் திகதி Watermans, 40 High St Brentfordல் இடம்பெற்றது. பிரித்தானியாவில் நூல்களுக்கு வழங்கப்படும் விருதான Bookers Prize க்கு 1994ல் ரொமேஸ் குணசேகராவுடைய Reef என்ற நாவலும் இறுதித் தேர்வுக்கு தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவர் Monkfish Moon, the Sandglass, Heavens Edge ஆகிய நாவல்களை எழுதி உள்ளார். இந்நிகழ்வில் Heavens Edge நாவலில் இருந்து சில பகுதிகளை வாசித்தார்.

# குர் ஆன் - கருத்தாக்கம்

இஸ்லாமிய ஆன்மீக நூலான குர் ஆன் ஐ மதத் தலைவர்கள் மட்டுமே கருத்தாக்கம் செய்யும் முறை மாற்றப்பட வேண்டும் என்று கருத்து வெளியிட்ட ஈரானிய பேராசிரியருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனை 75 சவுக்கடிகளாகக் குறைக்கப்பட்டு உள்ளது. இக் கருத்து இஸ்லாமை அவமதிப்பதாக அமைந்ததாகக் கூறியே அப்பேராசிரியருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்கள் திரண்டெழுந்தனர். அதன் பின்னர் அவ்வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் மரண தண்டனையை 75 சவுக்கடிகளாக மாற்றியது.

# கிறிக்கல் வூட் பெற்றோல் நிலையத்தில் கொலை

முகாமையாளர் சந்திரகுமாரின் நிர்வாகத்தில் இருந்த கிறிக்கல் வூட் பெற்றோல் நிலையத்தில் மார்ச் அதிகாலை ஒரு கொலை இடம்பெற்று உள்ளது. வடமேற்கு இலண்டனில் உள்ள பெற்றோல் நிலையத்துக்கு வழமையாக வரும் குவாமீர் மிர்ஸா(48) என்ற வாடிக்கையாளரே பருத்த உருவமுடைய ஒரு வெள்ளை இனத்தவரால் குத்திக் கொல்லப்பட்டு உள்ளார். அதிகாலை 2 மணிக்கு பெற்றோலை நிரப்பி விட்டு தனது மிட்சுபிசி காரின் கண்ணாடியை துப்பரவு செய்து கொண்டிருந்து உள்ளார் மிஸ்ரா. அப்போது அங்கு வந்த பருத்த உருவமுடைய வெள்ளையர் சிகரட்டை வாங்கிவிட்டு மிஸ்ராவை நோக்கிச் சென்று வாக்குவாதம் பட்டுவிட்டு கத்தியால் குத்தி உள்ளார். இச்சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட 8 அங்குலம் நீளமான சமையலறைக் கத்தி சம்பவ இடத்தில் கண்டெடுக்கப்பட்டது.

மேற்படி கொலையை தனது கஸியர் பார்த்ததாகக் குறிப்பிட்ட முகாமையாளர்(40) சந்திரகுமார் மேற்படி சம்பவம் CCTVல் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றும் தெரிவித்தார். சம்பவத்தை பார்த்த காசாளர் அதிர்ச்சிக்கு உள்ளாகி உள்ளார். வழமைக்கு மாறாக ஏதோ நடப்பதை அறிந்த காசாளர் அங்கு நிலமைகள் மோசமடைவதை அடுத்து பொலிஸாருக்கும் மருத்துவ வண்டிக்கும் அழைப்புவிடுத்து உள்ளார்.

இக்கொலை தொடர்பான விசாரணையை புலனாய்வு அதிகாரி சுப்பிரின்டன்ட் டேவ் குக் மேற்கொண்டு உள்ளார். கொலைக்கான காரணம் அறியப்படாத நிலையில் இது ஒரு இனவாதக் கொலையாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். சிகரட்டை வாங்கிய கொலையாளி காசாளருடன் எந்தப் பிரச்சினையையும் எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

NEW DELUXE BLEND
KUCHH NAI®
SCOTCH WHISKY
"NOTHING" Tastes Better
"மீண்டும் மீண்டும் சுவைக்கத் தூண்டும் குச் நய் விஸ்கி"
TRADERS WELCOME
All other products also at wholesale prices
DRINKS ENTERPRISE
Cash & Carry Ltd.
Please call us on
020 8893 6000
Fax: 020 8893 5943
email: sales@drinks-enterprise.com
Lion House, Bridge Road, Southall, Middx. UB2 4AB

Hall Hire
திருமணம், பிறந்தநாள் வைபவங்கள், மீட்டிங்குகள், கலை-கலாச்சார நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், மற்றும் இதர வைபவங்களுக்கு பாக்ஸ் ஒபீஸ், 200க்கும் மேற்பட்ட இருக்கை வசதி, 350பேருக்குறிய கொள்ளளவு, அன்மையில் புதுப்பிக்கப்பட்டதும், டாய்லட், ஒலிபெருக்கி இயந்திரங்கள், சிறப்பு அதிக ஒளி-விளக்குகள், சீறியல் அலங்கார விளக்குகளுடன் முதல் மாடியில் அமைந்துள்ள அருமையான இந்த ஹாலை புக் செய்ய நாடுங்கள் 020 8905 7775
(விதிமுறை: மாமிச உணவு, மதுபானம் அருந்துதல், உள்ளுக்குள் புகைபிடித்தல் தவிர்க்க வேண்டும்.)

ADVT.

# சர்வதேச பெண்கள் தினம்

## கவுன்சிலர் எலிசா மஆன் (Mann) ஒரு முன்னுதாரணம்

மார்ச் 8ம் திகதி சர்வதேச பெண்கள் தினம் உலகம் முழுவதும் உள்ள பெண்களால் கொண்டாடப்பட்டது. இலண்டனுக்குப் புலம்பெயர்ந்த பெண்களைப் பொறுத்தவரை அவர்கள் தங்கள் சமூகத்தில் இருந்து வரும் ஒடுக்குமுறையுடன் ஒரு சிறுபான்மைச் சமூகம் என்ற வகையிலும் ஒடுக்குமுறைக்கு உள்ளாகின்றனர். இந்த இரட்டை ஒடுக்கு முறையையும் உடைத்து சமூகத்தில் ஒரு மக்கள் பிரதிநிதி என்ற தகமைக்கு கவுன்சிலர் எலிசா மஆன் உயர்ந்திருப்பது அவரது அயராத உழைப்பிற்குக் கிடைத்த வெற்றி என்கிறார் அவரைப் பற்றி அறிந்திருந்த முன்னாள் போராளியான கெ வசந்தி. இவர் அடைந்துள்ள இந்த நிலை புலம்பெயர்ந்த தமிழ்ப் பெண்களுக்கு முன்னுதாரணமாக அமைந்து உள்ளதுடன் முதல் தமிழ்ப் பெண் கவுன்சிலர் என்பதை வரலாற்றில் பதித்து உள்ளார் என்றும் கூறினார் வசந்தி.

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்களுடன் இணைந்து பணியாற்றி வரும் இவர் தாயகத்தில் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களுக்காகத் தொடர்ந்து போராடியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அண்மைக் காலத்திலும் தாயகம் சென்று அங்குள்ள மக்களின் நிலையை அறிந்து வந்துள்ளார். பல்வேறு தமிழ் அமைப்புகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பொதுச் சேவைகளில் பெருமளவு நேரத்தைச் செலவிட்டு வரும் இவர் அண்மைக் காலமாக தமிழ் அமைப்புகளில் வெளிப்பட்டு வரும் நிர்வாகச் சீர்கேடுகளுக்கு எதிராக உள்ளேயும் வெளியேயும் குரல் எழுப்பி வருகிறார்.

இவரது பயணம் கவுன்சிலர் என்பதற்கும் மேலே சென்று பிரித்தானியாவின் முதல் தமிழ்ப் பெண் பாராளுமன்ற உறுப்பினராக வேண்டும் என வாழ்த்தியதுடன் அவரது வழிகாட்டலில் இன்னும் பல நூறு தமிழ்ப் பெண்கள் தமது சிந்தனையை செழுமைப்படுத்தி முன்னேற வேண்டும் என்ற தன் ஆவலை வெளிப்படுத்தினார் வசந்தி.

# மலேசியத் தமிழ் பிரமுகர்கள் இலண்டன் விஜயம்

## அமைச்சர் அவர்களை கௌரவிக்கிறார்

மலேசியத் தமிழர் இலக்கிய நிகழ்வு ஏப்ரல் 5ம் திகதி ஸரட்பேட் நூலக மண்டபத்தில் நடைபெற இருக்கிறது. ஐரோப்பாவில் முதன் முதலில் நிகழவிருக்கும் மலேசியத் தமிழ் இலக்கிய நிகழ்வு இதுவாகும். புலம் பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் இலக்கிய ஆர்வலர்களுடன் மலேசியா, இலங்கை, இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் இலக்கிய ஆர்வலர்கள் கலந்து கொள்ள உள்ளனர். காலை பத்து மணி முதல் மாலை 6 மணிவரை நடைபெற உள்ள விழாவில் நியூ□ாம் பா உ ம் ஸ்ரீபன் ரிம்ஸ் கலந்து கொள்கிறார். இவர் அமைச்சரவையில் இணைய வர்த்தகத்தக்கான செயலாளர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் மலேசியாவில் இருந்து வருகை தரும் தமிழ் அறிஞர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கி கௌரவிப்பார் என நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர்களில் ஒருவரான ஆய்வாளர் பொன்முத்து தெரிவிக்கிறார்.

இந்நிகழ்ச்சிக்கு மலேசியா இன்ரி கல்லூரி விரிவுரையாளர் கெ அரிகிருஷ்ணன், மலேசிய தேசியக் கூட்டுறவுச் சங்க நிதி நிர்வாகி பி சகாதேவன், மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத் துணைத் தலைவர் சையட் பீர் முகம்மது, ஆசிரியர் சி எம் அண்ணாத்துரை ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொள்ள உள்ளனர். இவர்களுடன் யாழ் மாவட்ட ஆயர் ஜெபநேசன், பாரிஸ் அப்பால் தமிழ் தள நெறியாளர் கி பி அரவிந்தன் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர். இவர்களுடன் பல இலக்கிய ஆர்வலர்களும் கலந்து கொள்ள உள்ளனர்.

ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக வளர்ந்து வேர்விட்ட மலேசியத் தமிழ் இலக்கியங்களை உலகத் தமிழர்களின் பார்வைக்கு வெளிச்சமிட்டுக் காட்டும் நிகழ்வு இது என அவர் குறிப்பிட்டார். இவர் மலேசிய உள்துறை அமைச்சின் பத்திரிகைக் கண்காணிப்புப் பிரிவின் தமிழ்ப் பிரிவுப் பொறுப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மலேசியத் தமிழர் இலக்கிய நிகழ்வு உலகத் தமிழர் ஒருமைப் பாட்டுக்கு ஒரு முன் உதாரணம் என நியூ□ாம் கவுன்சிலர் போல் சத்தியநேசன் தெரிவிக்கிறார். இலண்டனில் மலேசியத் தமிழர்கள் செறிந்து வாழும் நியு□ாம் பகுதிக் கவுன்சிலர் இவர். இந்த மலேசியத் தமிழர் இலக்கிய நிகழ்வு தொடர்பாக காத்திரமான பங்களிப்பை இவர் மேற்கொண்டு வருகிறார் என ஏற்பாட்டாளர்கள் உதயனுக்குத் தெரிவித்தனர். இந்நிகழ்வின் மூலம் மலேசியத் தமிழ் இலக்கியம் பற்றிய ஒரு அறிமுகம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ் மக்களிடையே ஒரு உறவுப் பாலத்தை ஏற்படுத்தும் இந்த நிகழ்வில் மலேசியத் தமிழ் மக்களின் கலை, இலக்கிய, சமூக, பொருளாதார அம்சங்களை வெளிப்படுத்தும் கட்டுரைகள் அத்துறைசார்ந்தவர்களால் சமர்ப்பிக்கப்பட இருக்கிறது. மலேசியத் தமிழர்கள், மலேசியத் தமிழர் வரலாறும் இலக்கியமும், மலேசியக் கவிதைகள் ஒரு பார்வை, மலேசியப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும், மலேசியத் தமிழ்ப் பள்ளிகளும் கல்வியும், யாழ் மலேசிய இணைவும் மலேசிய இலக்கியத்தில் அதன் தாக்கமும் போன்ற தலைப்புகளில் பேச்சுக்கள் இடம்பெற இருக்கிறது. பேராசிரியர் கலாநிதி மு நித்தியானந்தன் இதற்கு தலைமை ஏற்கிறார். விழாவில் மலேசிய நூல்களின் கண்காட்சியும் கலந்துரையாடலும் இடம்பெற இருக்கிறதது. இந்நிகழ்ச்சிக்கு மலேசியத் தூதரகம் தனது ஆதரவை வழங்கி உள்ளது. மேலும் இந்நிகழ்வினை ஒட்டிய மலரும் அங்கு வெளியிடப்பட இருக்கிறது.

# வாழும் உரிமைக்காகப் போராட மக்கள் அணி திரண்டனர்

அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களை நாடுகடத்துவதற்கு எதிரான போராட்டத்துக்கான கூட்டம் பெப்ரவரி 28 மாலை 7 மணிக்கு இல்போர்ட் ரவுன் ஹோலில் இடம்பெற்றது. தஞ்சம் கோரும் இலங்கைத் தமிழர்களை பாதுகாக்கும் குழு (Committe to Defend Srilankan Tamil Assylum Seekers-CDSTAS) என்ற அமைப்பே இந்தக் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது. ரெட்பிறிஜ் பகுதித் தொழிற்கட்சி உறுப்பினர் தவத்துரை ஜெயரஞ்சன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் CDSTAS ன் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் த ஜெயரஞ்சனுடன் நியூஹாம் கவுன்சிலர் போல் சத்தியநேசன், தமிழர் புனர்வாழ்வுக் கழக முக்கிய உறுப்பினர் போஸ், பிரித்தானிய அகதிகள் அமைப்பு அலுவலர் கெ சிதம்பரநாதன் ஆகியோர் உரையாற்றினர்.

அண்மைக் காலங்களில் இலங்கைக்குச் சென்று திரும்பிய தலைவர் த ஜெயரஞ்சன் துணைத் தலைவர் போல் சத்தியநேசன் ஆகியோர் இலங்கையில் தற்போதுள்ள நிலையில் அகதிகளைத் திருப்பி அனுப்ப முடியாது எனத் தெரிவித்தனர். கண்ணிவெடிகள் அகற்றப்படாத நிலையில், இலங்கைக்கு உள்ளேயே இடம்பெயர்ந்தவர்கள் தங்கள் இருப்பிடங்களுக்கு மீளச் செல்ல முடியாத நிலையில், பேச்சு வார்த்தைகள் மிக ஆரம்பக் கட்டத்திலேயே உள்ள நிலையில் திருப்பி அனுப்புவது என்பது ஏற்றுக் கொள்ள முடியாதது என அவர்கள் ஆணித்தரமாகக் குறிப்பிட்டனர்.

இக் கூட்டத்தில் நிராகரிக்கப்பட்ட தஞ்ச விண்ணப்பங்கள் பற்றிய விபரங்கள் வந்திருந்தவர்களிடம் இருந்து பெறப்பட்டது. இவ்விபரங்களைத் திரட்டி உள்துறை அமைச்சுடன் பேசி நாடுகடத்தலை தடைசெய்வது அல்லது பிற்போடுவதே இக்கூட்டத்தின் பிரதான நோக்கம் என அங்கு தெரிவிக்கப்பட்டது.

தஞ்சம் மறுக்கப்பட்டவர்கள் குடும்ப உறவுகள் காரணமாகவோ, அவர்கள் கல்லூரிக்கு பதிவு செய்துள்ளதாலோ, குழந்தைகள் இருப்பதாலோ தொடர்ந்தும் தங்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளதாகச் சுட்டிக் காட்டி தனது உரையை ஆரம்பித்தார் ஜெயரஞ்சன். தஞ்சம் மறுக்கப்பட்டவர்கள் தங்கள் நியாயங்களை உள்ளாட்சி அதிகாரிகளிடமும் பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் எடுத்துச் செல்ல வேண்டும் என்று குறிப்பிட்ட ஜெயரஞ்சன் தொடர்ச்சியான அரசியல் அழுத்தங்கள் மூலமே அரசின் திருப்பி அனுப்பும் போக்கைக் கட்டுப்படுத்தலாம் எனக் குறிப்பிட்டார். தஞ்சம் மறுக்கப்பட்டவர்கள் அனைவரும் தங்கள் பகுதி உள்ளாட்சி மன்ற உறுப்பினருடனும் பாராளுமன்ற உறுப்பினருடனும் தொடர்பு கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

தமிழர்களின் பங்களிப்பும் எதிர்கால நடவடிக்கைகளும் என்ற தலைப்பில் பேசிய போஸ் குறுகிய கால நீண்ட கால நடவடிக்கைகள் என இரு பிரிவான செயற் திட்டங்களை முன் வைத்தார். இவற்றைச் செயற்படுத்த ஆண்டுக்கு £50,000 செலவு ஏற்படும் என போஸ் ஒரு மதிப்பீட்டை வெளியிட்டார். ஒரு இடத்தை வாடகைக்கு எடுத்து, அதற்கு தொலைபேசி இணைப்பைக் கொடுத்து, ஒரு அலுவலரை பணிக்கு அமர்த்தி, சட்ட ஆலோசனைகளை வழங்க இந்தச் செலவு ஏற்படும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் பரீட்சார்த்தமாக (test case) வழக்குகளை எடுத்து வாதாடவும் நிதி அவசியம் என்பதையும் போஸ் எடுத்துக் கூறினார். தமிழ் அகதிகளுக்கு வெவ்வேறு வகையிலும் உதவ பிரித்தானியாவில் உள்ள தமிழ் அமைப்புகளுக்கு £2.5 மில்லியனுக்கு மேல் வழங்கப்பட்டும் அது உரிய பலனை ஏற்படுத்தவில்லை என போல் சத்தியநேசன் குறிப்பிட்டார். சிதம்பரநாதன் தனது உரையில் தமிழ் சட்டத்தரணிகளின் பொறுப்பற்ற தன்மையை கடுமையாக விமர்சனம் செய்தார்.

இக்கூட்டத்தில் பிரித்தானியாவின் பல்வேறு பாகங்களில் இருந்தும் 700 பேர் வரை கலந்து கொண்டனர். அரசின் அகதிகள் பரவலாக்கல் திட்டத்தின் கீழ் நாட்டின் பல பகுதிகளிலும் தங்க வைக்கப்பட்டிருந்தவர்களும் இதில் கலந்து கொண்டனர். கடந்த பல ஆண்டுகளுக்குப் பின்னர் தங்கள் வாழும் உரிமைக்கான ஒரு போராட்டத்துக்கு மக்கள் அணி திரண்டு இருந்தது இதுவே முதற் தடவையாகும். வந்தவர்கள் பெரும்பாலும் தஞ்சம் மறுக்கப்பட்டவர்களாகவே இருந்தனர். அவர்களிடம் இக்கூட்டம் பற்றி பெருமளவு நம்பிக்கை காணப்பட்டது. அந்த நம்பிக்கை ஒழுங்கமைப்பாளர்கள் ஒரு தீர்வை பெற்றுக் கொடுக்கும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி உள்ளது.

# தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட

## சட்டத்தரணிகளே காரணம் - கெ சிதம்பரநாதன்

27,000 இலங்கைத் தமிழர்களின் தஞ்ச விண்ணப்பங்கள் நிராக்கரிக்கப்பட்டு உள்ளதாகக் குறிப்பிட்ட பிரித்தானிய அகதிகள் அமைப்பு அலுவலர் சிதம்பரநாதன் இலங்கைத் தமிழர்கள் எனப் போலியாக பதிவு செய்த தமிழகத்தைச் சேர்ந்தவர்களின் 85 வீதமான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு உள்ளதாகக் குறிப்பிட்டார். பெப்ரவரி 28ல் நடைபெற்ற தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களைத் திருப்பி அனுப்புவதற்கு எதிரான போராட்டக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார். தஞ்ச விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு தமிழ் சட்டத்தரணிகளே முக்கிய காரணம் எனக் குற்றம் சாட்டிய சிதம்பரநாதன், போலித் தஞ்ச விண்ணப்பதாரிகள் அதிக பணம் ( £2000 ) செலுத்துவதால் சட்டத்தரணிகள் கூடிய கவனம் எடுத்து அவ்வழக்குகளை வெற்றி பெறச்செய்வதாகக் குறிப்பிட்டார். அதே அளவு கவனத்தை உண்மையான அகதிக்கு இவர்கள் வழங்காததால் அவ்வழக்குகள் பெரும்பாலும் தோல்வி அடைவதாக அவர் குற்றம் சாட்டினார். தமிழர்களின் தஞ்சம் நிராகரிக்கப்பட சட்டத்தரணிகளும் உள்துறை அமைச்சு தமிழ் தஞ்ச விண்ணப்பதாரியை நம்ப மறுத்ததுமே காரணம் எனவும் சிதம்பரநாதன் குறிப்பிட்டார்.

திருப்பி அனுப்பப்போவது பற்றி தஞ்ச விண்ணப்பதாரிக்கோ அவரது சட்டத்தரணிக்கோ எச்சரிக்க வேண்டிய கடமைப்பாடு இல்லை. ஆனால் சட்டப்படி தஞ்ச விண்ணப்பதாரிகள் காவல் நிலையத்தில் அறிவிக்கக் கடமைப்பாடு உடையவர்கள். அவர்களை உடனடியாக அவர்களது உடைமைகளைக் கூட எடுக்க அனுமதிக்கப்படாமல் திருப்பி அனுப்பும் அதிகாரம் குடிவரவு அதிகாரிகளுக்கு; புதிய சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு உள்ளது என்று அகதிகளின் தற்கால நிலவரத்தை விளக்கினார் சிதம்பரநாதன். அவர் தொடர்ந்து பேசுகையில் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவதற்கு எதிராக எப்படியெல்லாம் போராட வேண்டி இருந்தது என்பதை நினைவுபடுத்தினார். தமிழர்கள் ஏனைய சமூகங்களுடன் சேர்ந்து போராட வேண்டியதன் அவசியத்தையும் அவர் குறிப்பிட்டார். அப்படி இணைந்து போராடும் போது தான் தமிழர்களுக்காக ஏனைய சமூகங்கள் குரல் கொடுக்க முன்வருவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

பலவந்தமாகத் திருப்பி அனுப்ப ஏற்படும் செலவிற்கு அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்திடம் £70 மில்லியன் கேட்டிருப்பதாகவும் அப்பணம் கிடைக்கப் பெற்றால் திருப்பி அனுப்பப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பப்படும் எனவும் சிதம்பரநாதன் தெரிவித்தார்.

# பிரித்தானிய வேலைகள் இந்தியா நோக்கித் திரும்புகிறது

பிரித்தானியாவுக்கான தொலைபேசி மையங்கள் இந்தியா நோக்கி நகர்வதால் பிரித்தானிய தொழில் வாய்ப்புக்கு ஆபத்து ஏற்பட்டு உள்ளதாக தொலைத்தொடர்பு தொழிற்சங்கம் (Communication Workers Union - CWU) எச்சரித்து உள்ளது. பிரித்தானிய தொலைத்தொடர்பு நிறுவனமான BT தனது தொலைத் தொடர்பு மையம் ஒன்றை இந்தியாவில் அமைக்க இருப்பதை அடுத்தே தொழிற்சங்கம் இந்த அச்சத்தை வெளிப்படுத்தி உள்ளது. மேலும் தேவை ஏற்படின் வேலை நிறுத்தத்தை செய்யப் போவதாகவும் எச்சரித்து உள்ளது.

BUPA, British Airways, HSBC, AXA, Prudential, Britania, Churchill Insurance, Great Universal, Royal & Sun Allience, Eagle Star, AOL, GE Capital, Fidelity & Ebookers ஆகிய நிறுவனங்களைப் பின்பற்றி BT நிறுவனமும் 700 பேர் கொண்ட தொலைபேசி மையத்தை அமைக்க உள்ளது. தாங்கள் அங்கு மையத்தை அமைத்தாலும் இங்கு யாரையும் வேலை நீக்கம் செய்ய மாட்டோம் என BT பேச்சாளர் தெரிவிக்கிறார். இந்நிறுவனம் தனது தொலைபேசி மையத்தை இந்தியாவுக்கு மாற்றினால் தனக்கு ஏற்படும் செலவில் 40 வீதத்தை மீதப்படுத்தலாம் என மதிப்பிடப்படுகிறது. அடுத்த 7 ஆண்டுகளில் 20 வீதமான பிரித்தானிய தொலைபேசி மையங்கள் இந்தியாவுக்கு நகர்த்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அடுத்த 5 ஆண்டுகளில் 100,000 இந்தியப் பட்டதாரிகள் பிரித்தானிய நிறுவனங்களுக்கான தொலைபேசி மையங்களில் வேலை செய்வார்கள் என நம்பப்படுகிறது.

இந்தியா போன்ற தெற்காசிய நாடுகளில் மட்டுமல்லாமல் தென் ஆபிரிக்கா, பிலிப்பைன்ஸ், சீனா ஆகிய நாடுகளுக்கும் செலவுக் குறைப்பு நடவடிக்கையாக இந்த தொலைபேசி மையங்கள் நகர்கின்றன. இருப்பினும் இந்தியப் பட்டதாரிகளின் ஆங்கிலப் புலமை கணணித் தொழில்நுட்பத்தில் இந்தியாவின் வளர்ச்சி ஆகியவை இந்தியாவுக்கு மிகவும் சாதகமாக அமைந்து உள்ளது.

# இலக்கிய விருது

யோமனியில் பீறீமன் நகரில் இயங்கிவரும் பிறீமன் கலை இலக்கிய மன்றத்தினர் இந்த ஆண்டிலிருந்து இலக்கியப் படைப்புகளுக்கான விருதொன்றை வழங்க இருப்பதாக அறிவித்துள்ளனர். ஏற்கனவே இதனை தங்கள் மன்றத்தின் பத்தாம் ஆண்டு நிறைவு நிகழ்ச்சியில் அறிவித்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

2002 தை முதலாம் திகதியிலிருந்து 2002 மார்கழி 31 திகதி வரையில் சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத் தளங்கள், தொகுப்புகள் ஆகியவற்றில் பிரசுரமான புகலிட சிறுகதைகளை படைப்பாளர்கள், வாசகர்களிடமிருந்து சேகரித்து அவற்றிலிருந்து பன்னிரு சிறுகதைகளைத் தேர்ந்து நூலாக்கவும் -அந்தப் பன்னிரு சிறுகதைகளில் சிறந்ததென தெரிவு செய்யப்படும் ஒரு சிறுகதைக்கு புகலிட இலக்கிய விருது வழங்கப்படும் என்றும் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

புகலிட இலக்கிய விருதுத் தேர்வுக்கு ஏற்கப்படும் சிறுகதைகள் இலங்கை இந்தியா மலேசியா சிங்கப்பூர் ஆகிய நாடுகளைத் தவிர்ந்த ஏனைய நாடுகளில் வாழும் எழுத்தாளர்களினால் மட்டுமே எழுதப்பட்டிருக்க வேண்டும். இவற்றின் பிரசுமானவற்றின் பிரதிகள் 30.06.2003 வரையில் தேர்வுக்காக ஏற்ககப்படும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றார்கள். இம்முயற்சி வெற்றியளித்தால் ஏனைய இலக்கியத் துறைகளும் புகலிட இலக்கிய விருதுக்காக தம்மால் பரிசீலிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

# மேற்கு ஐரோப்பிய தலைநகரங்களின் நவீன அடிமைகள்

தெருக்களில் அடிமைத் தனம் தீர்ந்த பாடாய் இல்லை. அவை நவீன அடிமைத்தனங்களாக தம்மை புதுப்பித்துக் கொள்ளுகின்றன. இந்த மனிதர்களின் கள்ளத் தனமான மோசடிமிக்க வேலைகளை பொருளாதார சமூக ஆய்வு ஒன்று திரைவிலக்கி இருக்கிறது. அடிமைத்தனம் மறைந்து போகவே இல்லை என அது எடுத்த எடுப்பிலேயே தெரிவிக்கிறது. இதுபற்றி சமூகப் பொருளாதார ஆய்வாளர் மிஷல் மொன்றிக(Michèle Monrique); "மௌனமாக இருத்தல் குற்றவாளியாக்கும்" என எச்சரிக்கிறார்.

மேலும் வீட்டடிமைத்தனம் கண்ணுக்குத் தெரியாததும் நவீன முறையிலானதும் எனக் கூறும் அவர் இது இளம் பெண்களையே அதிகம் பாதிக்கிறது என்கிறார். மேற்கு ஆபிரிக்கா, ஆசியா போன்ற நாடுகளிலிருந்து இவர்கள் அழைத்து வரப்படுகிறார்கள். இந்தச் செயல்களுக்குப் பின்னால் மாபியா Mafias போன்ற குற்றக்குழுக்கள் இருக்கின்றன. இவை அவர்களின் சுதந்திரத்தை பறிக்கின்றன. பல வேளைகளில் அவர்களின் சம்பளத்தையும் கொடுக்க மறுக்கின்றன. Zhe Jiang என்ற சீனப் பகுதிகளிலிருந்தும் பெண்கள் அடிமைகளாக மாபியா குழுகளால் கொண்டு வரப்படுகிறார்கள் என்றும் அவர்கள் அவ்வாறு அவர்களால் கொண்டு வரப்படுவதால் அவர்கள் வாழ்க்கையை அவர்களிடம் அடமானம் வைக்க நேரிடுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. பாதிப்படைந்தவர்கள் பாரிஸிலில் உள்ள சீன நகரங்களில் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் பத்திரிகை ஒன்றின் செய்தி கட்டுரையில் தெரிவித்திருக்கின்றது. இக் குழுக்கள் அவர்களையும் அவர்கள் குடும்பத்தாரையும் பயமுறுத்தி வைத்திருக்கின்றன என அது மேலும் தெரிவிக்கிறது.

ஆறு வயதிலிருந்து எட்டு வயதுக்குட்பட்ட கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்த குழந்தை தொழிலாளர்களும் துன்பத்துக்குள்ளாகுவதாகவும் அநாகரீகமாக நடத்தப் படுவதாகவும் அப் பத்திரிகை மேலும் குறிப்பிட்டிருக்கிறது. சிறு வயதிலேயே வேலைக்கு அமர்த்தப்படுவதால் அவர்கள் உடல் ஊனம் உற்றவர்களாகவும் மன வளர்ச்சி குன்றியவர்களாகவும் காணப்படுவதாக தெரிவிக்கிறது. இவை ஒன்றும் எமது பார்வைகளில் எட்டக் கூடியவையாக இருப்பதில்லை.

ஆனால் விபச்சார நடவடிக்கையில் ஈடுபடுவோரை பார்க்கக் கூடியதாக இருக்கிறது அது கூட மோசமான அடிமைத் தனமாகவே இருக்கிறது ஆரம்பத்தில் இது ஒரு தேர்வாக இருப்பதில்லை என்றும் சமூக பொருளியால் ஆய்வாளர் மிஷல் மொன்றிக் அவர்கள் கூறுகிறார்கள். இவ்வாறான நடவடிக்கை மூலம் வருடத்தில் இரண்டு கோடியிலிருந்து மூன்று கோடி ஈரோ ஈட்டப்படுவதாக புள்ளி விபரம் ஒன்று தெரிவிக்கிறது. 2001ல் அறுபத்தைந்து வீதமான ஆபிரிக்க நாட்டவர்களும், இருபத்தி ஆறு வீதமான ஆசிய நாட்டவர்களும் ஒரு வீதமான பிரஞ்சு நாட்டவர்களும் பாதிக்கப்பட்டிருப்பதாக அப் புள்ளி விபரம் பட்டியலிடுகிறது. நாள் ஒன்றுக்கு தலா ஒருவர் என்ற அடிப்படையில் இந்த அடிமைத் தனத்துள் சிக்கி சீரழிய நேரிடுவதாக அது கவலை கொள்கிறது.

# அகதி உடன்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்த ரொறி உத்தரவாதம்

தமது கொள்கை விளக்கத்தை வெளிப்படுத்திய ரொறி கட்சியினர் ஐ நா, டப்ளின் மற்றும் ஐரோப்பிய அகதி உடன்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்தக் கோருவோம் என அக்கட்சியின் தலைவர் இயன் டங்கன் சிமித் தெரிவித்து உள்ளார். பிரித்தானியாவிற்குள் நுழையும் அகதிகள் அனைவரும் தடுத்து வைக்கப்பட வேண்டும் என்று கோரும் இத்தலைவர் பிரித்தானிய மக்களிற்கு குறிப்பிட்ட நபரால் எந்த பாதிப்பும் ஏற்படாது என உறுதிப்படுத்திய பின்னரே அவர்கள் தெருவில் இறங்க அனுமதிக்கப்பட வேண்டும் என அவர் தெரிவிக்கிறார்.

அக்கட்சியின் முன்னாள் தலைவர் வில்லியம் ஹேக், முன்னாள் நிழல் உள்துறை அமைச்சர் அன் விடகொம் போன்ற தீவிர வலதுசாரிகளின் பாதையில் டங்கன் சிமித்தும் அடி எடுத்து வைக்க ஆரம்பித்து உள்ளார். டங்கன் சிமித்தின் இக்கொள்கை அகதிகள், மனித உரிமைகள் அமைப்பிடம் மிகுந்த எதிர்ப்பைப் பெற்று உள்ளது. அண்மைக்காலமாக எழுந்துள்ள சர்வதேச பயங்கரவாதத்தை ஒழிப்பதென்ற கோசத்தில் அகதிகளுக்கு எதிரான கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. அகதிகள் என்ற போர்வையில் பயங்கரவாதிகள் நாட்டுக்குள் பிரவேசித்து பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிப்பதாக ரொறி கட்சியினர் தெரிவிக்கின்றனர். வலதுசாரிப் பத்திரிகைகளான சன், டெய்லி மெயில் ஆகியவை அகதிகளின் தகமையைப் பாதிக்கும் பாரிய பிரச்சாரத்தில் ஈடுபட்டு உள்ளன. இதன் மூலம் பிரித்தானியாவுக்குள் அகதிகளாக வருபவர்கள் குற்றவாளிகளாகவும் பயங்கரவாதிகளாகவும் பார்க்கப்படுகின்றனர்.

தற்போதுள்ள அகதி உடன்பாடுகள் 50 ஆண்டுகள் பழமையானவை என்றும் அவை காலத்துக்கு ஒவ்வாதது என்றும் ரொறிக் கட்சி வாதிடுகிறது. திருப்பி அனுப்பப்படும் பட்சத்தில் அந்நபர் சித்திரவதைக்கு உள்ளாவார் என்று உறுதிப்படுத்தப்பட்டால் அந்நபரை திருப்பி அனுப்புவதை அகதி உடன்படிக்கை தடுக்கிறது. தாம் பதவிக்கு வரும் பட்சத்தில் இது போன்ற உடன்பாடுகளில் மாற்றத்தைக் கொண்டு வரவும் புதிய விதிமுறைகளை உருவாக்கி தஞ்சம் கோருவதை கடுமையாக்கவும் போவதாக கொள்கை வெளியீட்டில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. அதேசமயம் நீண்டகாலத்தில் தாங்களும் ஐரோப்பிய மனித உரிமை உடன்பாட்டில் இருந்து வெளியேற வேண்டி இருக்கும் என பிரதமர் ரொனி பிளேயரும் எச்சரித்து உள்ளார். தஞ்ச விடயத்தில் தொழிற் கட்சியும் கொன்சவேடிவ் கட்சியும் ஏட்டிக்குப் போட்டியாக தாங்கள் தான் அகதிகளைக் கட்டுப்படுத்துவதில் கெட்டிக்காரர் எனக் காட்ட முயல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

MANAKTALA &CO.
Chartered Accounts
* Tax / VAT Return
* Accounts / Auditing
* Any needs for Accounts Purpose
Call Me
MR. PRADEEP MANAKTALA F.C.A, M.Sc.
on
Tel: 020 8579 7333
Fax: 020 8566 2028
Barclays Bank Chambers,
17 Leeland Mansions,
Leeland Road, West Ealing,
London W13 9HE

J K SHAH
Chartered Certified Accountants & Registered Auditors
e-mail: jk@jkshah.com
website: www.jkshah.com
570 Romford Road, Manor Park
London E12 5AF
TEL: 020 8553 2436
FAX: 020 8514 6939

K.M.S. Accountants
For FREE Consultation on Self Assessment Returns, CIS25 refunds, Financial Accounts for Limited Companies/ Sole Traders, Company Formation, VAT, PAYE & Book-keeping Services
Tel: 020 8503 3375
Email: kms_group@hotmail.com

BHANOT & CO.
Chartered Accountants
A COMPLETE RANGE OF SERVICES AT REASONABLE RATES
TAX
AUDIT
FINANCE
PENSIONS
MORTGAGES
BOOK-KEEPING
CASH-FLOWS
ACCOUNTS
PAYROLL
PLANS
VAT
020 8840 8844
Email: anil@bhanot.co.uk

A PROFESSIONAL SERVICE FOR YOUR BUSINESS
SHAH P.J. & CO
Certified Accountant & Registered Auditor
Covering London & The Home Counties
1st Class Service at Reasonable Rates
* SOLE TRADERS
* PARTNERSHIPS
* LIMITED COMPANIES
* ACCOUNTS/VAT
* SELF ASSESSMENT
* TAX PLANNING
* BOOK-KEEPING BUREAU
* PAYROLL BUREAU
* SUB-CONTRACTORS
ACCA
Registered as Auditor by the Association of Chartered Certified Accountants
020 8907 1636 Fax 020 8907 9555
SHAH P.J. & COMPANY LIMITED 301 Kenton Lane, Harrow, Middx. HA3 8RR

MORTGAGE PLUS (London) LTD
Mortgages Tailor-made for You
* Specialist in CCJ/Default Cases
Tel:
020 8571 2570
07710 150713
81, South Road, Southall, Middx.
Your home is at risk if you fail to keep up repayments on loans secured on it.

# இரட்டைத் தமிழ் கொலைகள்! நீதிமன்றில் திடுக்கிடும் தகவல்கள்!!

## தந்தை கொலைப் பழி சுமத்தப்பட்ட மகனைக் காக்க முயற்சி

அரவிந்தன் முத்துக்குமாரசுவாமி (25), சுபேந்தர் இராமச்சந்திரன் (18) ஆகிய இரு இளைஞர்கள் கொலையிலும் குற்றம் சாட்டப்பட்ட வெம்பிளியில் உள்ள செட்ஸ்வேர்த் அவனியூவில் வசித்த செந்தமிழ் தில்லைநாதனின் (22) வழக்கு விசாரணைக்கு வந்து உள்ளது. எட்டு மாத இடைவெளியில் இடம்பெற்ற இவ்விரு கொலைகளையும் குற்றம் சுமத்தப்பட்ட செந்தமிழும் அவரது கோஷ்டியும் மறுத்து உள்ளனர். இவ்விரு கொலைகளும் கொலை செய்யப்பட்டவர்களின் அன்புக்குரியவர்களை மீளாத்துயரில் ஆழ்த்தியதுடன் புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தின் மீது பெரும் கறையையும் ஏற்படுத்தி உள்ளது. இவ்விரு சம்பவங்களாலும் வரிசெலுத்தும் மக்களுக்கு £2.5 மில்லியன் பவுண் செலவு ஏற்பட்டு இருக்கலாம் என மதிப்பிடப்படுகிறது.

**அரவிந்தனின் கொலை :**

அரவிந்தன் முத்துக்குமாரசுவாமி 18 யூன் 2001ல் கோடரியால் தலை பிளக்கப்பட்டும் ஒரு கை வெட்டப்பட்டும் கொல்லப்பட்டார். இச்சம்பவம் வெம்பிளியில் உள்ள கிளன்மோர் பரேடில் இடம்பெற்றது. செந்தமிழ் தனது நண்பரின் காரை சேதப்படுத்தியதாக அரவிந்தனை தவறாக அடையாளம் கண்டு தனது குழுவினருடன் சென்று தாக்குதலை நடத்தியதாக பொலிஸார் குற்றம் சுமத்தி உள்ளனர். தாக்குதலின் போது அரவிந்தனுடன் இருந்த பாஸ்கரன் நடராஜா, தவக்குமார் மகாலிங்கம், விஸ்வநாதன் சதீஸ்வரன், பாத்தீபன் அரியரட்ணம் ஆகியோர் தாக்குதலிற்கு உள்ளாகினர். இவர்கள் மீதான தாக்குதலுக்கும் செந்தமிழ் குற்றம்சாட்டப்பட்டு உள்ளார்.

**சுபேந்தரின் கொலை :**

சுபேந்தர் இராமச்சந்திரன் பெப்ரவரி 17 - 20, 2002 திகதிக்கு இடையில் அடித்துக் கொல்லப்பட்டு குற்றுயிராக அவரது உடல் எரிக்கப்பட்டு கிங்ஸ்பறியில் உள்ள றோ கிறீன் பாக்கில் அனாதரவாக விடப்பட்டது. உடல் அடையாளம் காணப்படாமல் கொடூரமாக மேற்கொள்ளப்பட்ட இக்கொலை இலண்டனை பல நாட்களாக அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருந்தது. பல குற்றவியல் பரிசோதனைகளின் பின்னர் சுபேந்தர் அடையாளம் காணப்பட்டார். சுபேந்தரின் கொலையிலும் செந்தமிழ் முக்கிய குற்றவாளியாகக் காணப்பட்டார். அவருடன் பிரதீப் சிவநேசன் (18) ஜன்ஸ்ரீன் ஹவுஸ், சோக்கில் றோட்; கண்ணன் சிவகுமார் (30) சான்டி றோட், போர்□ம்வூட்; மற்றுமொருவர் 17 வயது என்பதால் அவரை சட்டப்படி அடையாளப்படுத்த முடியாது உள்ளது. இவர்கள் அனைவரும் தங்கள் மீது உள்ள குற்றத்தை மறுத்து உள்ளனர்.

**கொல்வதற்கு கோடாலி வாங்கியது :**

அரவிந்தன் கொல்லப்படுவதற்கு சில மணி நேரங்களிற்கு முன்னதாக தனது கோஷ்டி உறுப்பினர் ரூபன் என்பவருக்கு போன் செய்து என்ன ஆயுதத்தை வாங்குவது என்று கேட்டு உள்ளார் என கியூசி மைக்கல் ரேனர் தெரிவித்தார். இவர் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான பிரதீப் சிவநேசனின் வாதியாவார். வெஸ்ட் மிட்ல்ண்டில் டட்லி எனும் இடத்தில் உள்ள ஹாட்வெயர் ஸ்ரோரில் இருந்து செந்தமிழ் ரூபனின் கைத்தொலைபேசியில் கதைத்தற்கான சாட்சியம் யூரர்களுக்கு காட்டப்பட்டது. 'ஹாட்வெயர் ஸ்ரோரில் கோடாலிகள் விற்பார்கள். நீர் அங்கிருந்து உமது நண்பர் ரூபனுக்கு போன் செய்து அடித்து வதைக்க என்ன ஆயுதத்தை வாங்குவது எனக் கேட்டதில் எந்த ஆச்சரியமும் இல்லை. நீர் அங்கு ஆயுதத்தை தெரிவு செய்தீர்.' என கியூசி மைக்கல் ரேனர் கேட்டார். அதற்கு இல்லை என்று பதிலளித்த செந்தமிழ் அதற்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனப் பதிலளித்தார்.

**கொலை செய்ய மகிழ்ச்சித் தூண்டல்கள் :**

எட்டு மாதங்களின் பின்னர் செந்தமிழும் அக்கோஷ்டியின் 3 சகாக்களும் சுபேந்தரை அடித்துக் கொன்று எரித்ததாக நீதிமன்றத்துக்கு தெரிவிக்கப்பட்டது. அதனை மறுத்த செந்தமிழ் சுபேந்தர் கொலை செய்யப்பட்ட போது தானும் தனது நண்பனும் (தற்போது இந்தியாவில் உள்ளார்.) வீட்டில் தனது குடும்பத்தினருடன் இருந்ததாக தெரிவித்தார். மேலும் தனது குடும்பத்தினர் தன்னைக் காப்பாற்ற முயற்சித்ததாக சொல்லப்படுவதையும் செந்தமிழ் மறுத்தார். நீரும் உமது நண்பரும் சுபேந்தரைக் கொல்ல ஈவிரக்கமின்றி ஒருவரை ஒருவர் தூண்டிவிட்டதாக அரசதரப்பில் அப்ரப் ஜெப்றி கூற, தனக்கும் அக்கொலைக்கும் சம்பந்தமில்லை எனத் தெரிவித்த செந்தமிழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ள மற்றையவர்கள் தனது நண்பர்கள் இல்லை என்றும் அவர்களை ஓரளவு தெரியும் அவ்வளவு தான் என்றும் கூறியுள்ளார்.

**கொலைக்கு முன்னர் வேலை நீக்கம் :**

கொலை செய்வதற்குச் சில தினங்களுக்கு முன் வேலையிடத்தில் நித்திரை கொண்டதால் மிட்லண்டில் உள்ள 24 மணிநேர பெற்றோல் நிலையத்தில் இருந்து செந்தமிழ் வேலை நீக்கப்பட்டார் என்பது இவ்வழக்கின் போது நீதிமன்றுக்குத் தெரிவிக்கப்பட்டது. அவரது கடின உழைப்பால் அவரை உதவி முகாமையாளராக நியமித்ததாகக் குறிப்பிட்ட அப்பெற்றோல் நிலையத்தின் முகாமையாளர் சிவலிங்கம் தவராஜன், வியாழன் இரவு இவர் நித்திரை செய்ததாக ஒரு வாடிக்கையாளர் தெரிவித்ததாகவும் தான் CCTVயைப் பார்த்த போது மின் விளக்குகளை அணைத்து விட்டு நிலையத்தை முற்றாக மூடிவிட்டு செந்தமிழ் நித்திரையானது உறுதிப்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார். அதனால் வேலை ஒப்பந்தத்தை ரத்துச் செய்து வீட்டுக்கு அனுப்பியதாகவும் தேவராஜன் குறிப்பிட்டார்.

**சாட்சியை தந்தை தடுத்தார் :**

செந்தமிழ் தில்லைநாதன் மீதான குற்றச்சாட்டின் முக்கிய சாட்சி ஒன்றை அவரது தந்தையான தில்லைநாதன் நடராஜா தடுக்க முயற்சித்ததாக நீதிமன்றத்துக்குக் கூறப்பட்டது. பேக்கராகப் பணிபுரியும் தில்லைநாதனும் அவர் குடும்பத்தினரும் இரட்டைக் கொலைக் குற்றம் சுமத்தப்பட்ட செந்தமிழை பொலிஸார் கைது செய்யாமல் தப்பிக்கவும் சட்டத்தில் இருந்து தப்பிக்கவும் மூடிமறைக்க முயன்றதாக அரச தரப்பிலும் கியூசி மைக்கல் ரேனரும் குற்றம் சாட்டி உள்ளனர். புலம்பெயர்ந்த தமிழர் ஒருவர் அதுவும் குடும்பத்தினருடன் வாழ்ந்த ஒருவர் இரட்டைக் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு இருப்பது இதுவே முதற் தடவையாகும்.

செந்தமிழின் தந்தை தில்லைநாதன் கொலைக் குற்றம் சாட்டப்பட்ட மற்றொரு குற்றவாளியும் அரச தரப்பு சாட்சியுமான 17 வயது (சட்டப்படி பெயர் குறிப்பிட முடியாது) நபரை அணுகி தனது மகனுக்கு எதிராக சாட்சி சொல்ல வேண்டாம் என்றும் அச்சம்பவம் பற்றி யாருக்கும் சொல்ல வேண்டாம் என்றும் கடந்த ஆண்டு பெப்ரவரியில் மன்றாடிக் கேட்டு உள்ளார் என அங்கு தெரிவிக்கப்பட்டது.

சுபேந்தரை கொலை செய்துவிட்டு பெப்ரவரி 17ம் திகதி நள்ளிரவுக்கு சற்றுப் பின் வீட்டுக்கு வந்த செந்தமிழ் தன் தந்தையிடம் தான் சுபேந்தரை அடித்துக் கொன்றதை கூறியதாக கியூசி மைக்கல் ரேனர் நீதிமன்றில் கூறினார். அவர் மேலும் தன் வாதத்தைத் தொடர்கையில் கொலை செய்துவிட்டு வந்த மகனுக்கு தில்லைநாதன் மாற்று உடு துணியைக் கொடுத்து உடுப்பை மாற்றும் படி சொன்னதாகவும் போட்டிருந்த உடைகளை எரித்துவிடும்படி சொன்னதாகவும் மைக்கல் ரேனர் தன் வாதத்தில் குறிப்பிட்டார்.

இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்த தில்லைநாதன் அது பொய் என்றும் அப்படி எதுவும் நடக்கவில்லை என்றும் கூறியதுடன் தான் இரவு 8:30 மணிக்கு தூங்கச் சென்ற போது மகன் வீட்டில் இருந்ததாகவும் தெரிவித்தார்.

கொலை நடந்த மறுநாள் காலை தில்லைநாதன் அவருடைய குடும்ப நண்பர் ஒருவரை விமான நிலையத்திற்கு ஏற்றிச் சென்று உள்ளார் என்றும் அப்போது அவர் தனது மனைவியையும் அழைத்துச் சென்றதாகவும் குறிப்பிட்ட சட்டவாதி மேற்படி கொலைக்காக தங்கள் மகன் கைது செய்யப்படாமல் இருக்க என்ன செய்யலாம் என்பது பற்றி கதைக்கவே நோய்வாய்ப்பட்டு இருந்த தன் மனைவியை அதிகாலை 5:30 மணிக்கு எழுப்பி அழைத்துச் சென்றதாகக் குற்றம் சாட்டினார்.

இதனை மறுத்த தில்லைநாதன் தான் எப்போதும் தனது மனைவியை அழைத்துக் கொண்டுதான் வெளியே செல்வதாகவும் பயணம் செய்ய இருந்த நண்பரை தனது மனைவிக்கும் நன்கு தெரியும் என்றும் அதனால் வழியனுப்பி வைக்கவே தன் மனைவி தன்னுடன் வந்ததாகவும் தில்லைநாதன் தன் மறுப்பில் தெரிவித்தார். அதே தினம் செந்தமிழுடன் குற்றம் சாட்டப்பட்ட அவருடைய 17 வயது நண்பனின் வீட்டுக்குச் சென்ற தில்லைநாதன் பொலிஸாருக்கு எதுவும் சொல்ல வேண்டாம் என்று தெரிவித்து உள்ளார். பல வாரங்கள் சென்றபின் பின்னொரு சந்தர்ப்பத்தில் அந்த நண்பனின் குடும்பக் கடையில் பொருட்களை வாங்கும் போது அக்கொலை தொடர்பாக வாய்திறக்க வேண்டாம் என்றும் அமைதியாக இருக்கும் படியும் தில்லைநாதன் கேட்டதாக நீதிமன்றுக்குக் கூறப்பட்டது.

ஆனால் தில்லைநாதன் இவை எல்லாவற்றையும் நீதிமன்றில் மறுத்துவிட்டார்.

**செந்தமிழின் காதலியா?**

சுபேந்தரின் கொலையில் சம்பந்தப்பட்டதாகக் குற்றம்சாட்டப்பட்டு உள்ள பிரதீப் சிவனேசனின் 16 வயதுச் சகோதரி சுபேந்தர் கொலை செய்யப்பட்டதில் இருந்து செந்தமிழ் வீட்டில் தில்லைநாதன் குடும்பத்தினருடனேயே வாழ்ந்து வருகிறார் எனத் தனது குறுக்கு விசாரணையில் குறிப்பிட்ட பிரதீப் சிவனேசனின் சட்டவாதி ரேனர் தனது பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக தில்லைநாதன் குடும்பத்தில் வாழ்ந்த அச்சிறுமியை, அச்சிறுமியுடைய தந்தையும் மாமனும் கூட்டிச் செல்ல வந்ததாகக் குறிப்பிட்டார். ஆனால் அச்சிறுமியைப் பயன்படுத்தி நீதிமன்றில் பொய் சொல்ல வைத்து தன் மகனைக் காப்பாற்ற தில்லைநாதன் திட்டமிட்டதாக ரேனர் குற்றம்சாட்டினார். அவர் தனது குறுக்கு விசாரணையில் அச்சிறுமி சிறையில் இருந்த உங்கள் மகனைப் பார்க்க பெரும்பாலும் ஒவ்வொரு வார இறுதிநாளும் சென்றிருக்கிறார் தெரியுமா என தில்லைநாதனைக் கேட்டார்.

அதற்குப் பதிலளித்த தில்லைநாதன் அந்தப் பெண் தன் வீட்டுக்கு வந்ததில் தனக்கு விருப்பமில்லை என்றும் தனக்கு மேலதிக சுமையை ஏற்ற விரும்பவில்லை என்றும் அந்தப் பெண்ணுடன் தான் பேசுவதே இல்லை என்றும் குறிப்பிட்டார்.

ஓல்ட் பெய்லியில் இவ்வழக்கு தொடர்ந்தும் நடைபெறுகிறது.

# பிரான்சில் ஒரு நடனமாலை

கடந்த 16 பெப்ரவரி 2003 பாரிஸில் சலங்கை 2003 என்னும் நடன நிகழ்ச்சி நடைபெற்றது. பிரான்சிலுள்ள தமிழ்சோலைப் பள்ளிகள், சோதியா கலைக் கல்லூரி, ஏனைய தமிழ் பள்ளிகளுமாக 17 க்கும் மேற்பட்ட பள்ளிகள் இந்த நடன நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்தன. தமிழீழ எழுச்சிப் பாடல்களுக்கும், கீர்த்தனைகளுக்கும் நாட்டுப்புற பாடல்களுக்குமாக இந்த நடனங்கள் வடிவமைக்கப்பட்டிருந்தன. இதில் 75க்கும் மேற்பட்ட நடன மாணவ மாணவிகள் கலந்து கொண்டிருந்தார்கள். இந் நிகழ்வில் 'மண்டப்பா'நடன ஆலய பிரெஞ்சு நடன மாணவிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சலங்கை நிகழ்வு போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுடைய துரித புனர் வாழ்வு நிதிக்காக நடத்தப்பட்டு வருவதாகவும், பிரான்சிலுள்ள தமிழ்ப் பள்ளிகளினது நடன மாணவ மாணவிகள் இந் நிகழ்வில் கலந்து கொண்டு இந் நிகழ்வைச் சிறப்பித்து வருவதாகவும், முற்றிலும் பரத நாட்டிய நிகழ்வுகளையே அடிப்படையாகக் கொண்டு இந் நிகழ்ச்சி வருடா வருடம் நடைபெற்று வருகிறது என்றும் இது நான்காவது தடவையாக இடம் பெறும் நிகழ்வு என்றும் பிரான்ஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் சுந்தரவேல் தெரிவித்தார்.

எண்ணூறுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டிருந்தார்கள். இந் நிகழ்வில் மீரா மங்களேஸ்வரனுடைய 'நிருத்தியம்' பரத நாட்டிய நூல் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இந் நூலை தமிழ்ச் சோலைப் பணியகத்தின் தலைவர் மரிசிலன் ரொணி அவர்கள் பெற்றுக் கொண்டார். பிரான்சில் நீண்ட காலமாக நடன ஆசிரியராக பணிபுரிந்து வரும் -தயாளசிங்கம் அவர்கள் இந் நூலை அறிமுகம் செய்து உரை நிகழ்த்துகையில். "புலம் பெயர்ந்து வாழும் நடனக் கலைஞர்களுக்கு இந் நூல் மிகவும் பயன் கொண்டதாக இருக்கும் என குறிப்பிட்டார்.

# எறும்பு கடித்து மாணவி சாவு மாங்காய் பறிக்க மரம் ஏறியபோது பரிதாபம்

மாங்காய் பறிக்க மரம் ஏறியபோது, மாணவியை எறும்பு கடித்து குதறியது. மயங்கி விழுந்த மாணவி பரிதாபமாக செத்தார். எறும்பு கடித்ததால் ஒவ்வாமை ஏற்பட்டு மாணவி ஒருவர் உயிர் இழந்த சம்பவம் பத்தனம் திட்டா மாவட்டத்தில் நிகழ்ந்து உள்ளது.

கேரள மாநிலம் பத்தனம் திட்டா மாவட்டம் பந்தளம் அருகே உள்ள மங்காரப் பகுதியை சேர்ந்தவர் ஷீஜா பீவி. அவரது மகள் ஆமீனா (வயது 16). அவர் மாமரத்தில் ஏறி மாங்காய் பறித்துக்கொண்டு இருந்தார். அப்போது மாமர இலைகளில் கூடுகட்டியிருந்த நெருப்பு எறும்பு கூடு திடீரென்று ஆமீனா மீது விழுந்தது. கூட்டில் இருந்த எறும்பு கலைந்து ஆமீனாவை கடித்தது. சிறிது நேரத்தில் ஆமீனா உடல் முழுவதும் தடிப்பு ஏற்பட்ட நிலையில் மயங்கி விழுந்தார். உடனே அவரை சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி ஆமீனா பரிதாபமாக செத்தார்.

For News & Advertising: 020 8952 5677 For Distributions : 020 8905 7775

# தமிழ் காடையர் குழுக்களிடையே மோதல்

## கிழக்கு இலண்டனில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்- பொலீஸ் தகவல்

தமிழ்க் காடையர் குழுக்களிடையே இடம்பெற்ற மோதலில் கிழக்கு இலண்டன் கோஸ்டியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டு உள்ளார். 1979ல் பிறந்த திலீபன் தங்கவடிவேல் (23) என்ற இளைஞரே வெட்டப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டு உள்ளார். மார்ச் 19ல் இச்சம்பவம் அதிகாலை ஆறு மணியளவில் இல்போர்டில் உள்ள ஹென்லி வீதியில் இடம்பெற்றது. இச்சம்பவம் பற்றித் தெரிவித்த .இல்போர்ட் பொலிஸ் இன்ஸ்பெக்ரர் றொபேட் றிவில் தங்களுக்கு இச்சம்பவம் தொடர்பாக பலர் தொடர்பு கொண்டதாகவும் அவர்கள் துப்பாக்கிச் சத்தம் பற்றியும் குழப்பம் பற்றியும் தெரிவித்ததாகவும் தெரிவித்தார்.

ஹென்லி வீதியில் அமைதியாகத் தூங்கிக் கொண்டும் வேலைக்குத் தயாராகிக் கொண்டும் இருந்த மக்களை அடுத்தடுத்துக் கேட்ட நான்கு துப்பாக்கிச் சத்தங்கள் அதிர வைத்ததாக அப்பகுதி வாசிகள் தெரிவிக்கின்றனர். தற்போது சம்பவம் நடைபெற்ற வீடு கவல்துறையால் சீல் செய்யப்பட்டு உள்ளது.

இளைஞரின் மரணத்துக்கான பிரேத பரிசோதனை 26 மார்ச் 2003ல் மாலை 2 மணி அளவில் நடைபெற இருந்தது. சம்பவத்தின் கடுமையும் கொடுமையும் காரணமாக சடலம் தற்போது உரியவர்களிடம் கையளிக்கப்படாது என பொலிஸ் வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவிக்கின்றன. கொல்லப்பட்ட திலீபன் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்றும் அவரது பெற்றோரை இங்கு வரவழைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது. மேலும் கொலை செய்யப்பட்டவருக்காக ஈஸ்ற்□ாமில் பலாத்பாரமாக கறுப்புக் கொடி கட்டப்பட்டது. இது விடயமாக தமிழ் வர்த்தகர்கள் பயமுறுத்தப்பட்டதாகவும் சில வர்த்தகர்கள் பொலிஸாருக்கு முறையிட்டு உள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் தாங்கள் பணம் கேட்டு பயமுறுத்தப்படலாம் எனவும் என்பதற்காக இரகசிய பொலீஸார் இவர்களை கண்காணித்து அதற்குறிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாக அறியப்படுகிறது. காவல்துறையினர் இவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இவர்களை இப்பகுதியில் இருந்து முழுமையாக ஒழிக்கப்பட்டால்தான் அடுத்தவர்களுக்கு ஒரு பாடமாக அமையும் என்று பெயர் குறிப்பிட விரும்பாத அவ்வர்த்தகர் உதயனுக்குத் தெரிவித்தார். நாங்கள் அவன்கள் கேட்டபடி செய்யாவிட்டால் எங்களுக்குத் தான் ஆபத்து. எல்லாம் நடந்த பின்னர் தான் பொலீஸ் வரும் அதனால் என்ன பிரயோசனம் என அவர் பொலிஸாரைக் குற்றம்சாட்டினார்.

இக்கொலை விசாரணையை Serious Crime Group - DCI Broster என்பவர் விசாரித்து வருகிறார். தமிழ்க் காடையர்களைக் கட்டுப்படுத்தும் முகமாக இலண்டனில் உள்ள உள்ளாட்சி மன்ற காவல்துறைகளை இணைக்கும் பான் இலண்டன் அமைப்பு உருவாக்க திட்டமிட்ட பின்னர் நீண்ட நாட்களுக்குப் பின் இக்கொலை இடம்பெற்று உள்ளது. மெற்றோ பொலிட்டன் பொலிஸார் இலண்டனில் தமிழ்க் காடையர் மத்தியில் இடம்பெற்ற மோதலினால் ஏற்பட்ட அத்தனை கொலைக் குற்றவாளிகளையும் நீதிமன்றத்திற்கு முன்னர் நிறுத்தி உள்ளனர். தொடரும் இக்கொலைகள் தமிழ் சமூகத்தின் மீது சேற்றை இறைத்த வருகிறது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது ஈஸ்டாம் கோஸ்டி வெம்பிளி கோஸ்டியில் ஒருவரைத் தாக்கியதாகவும் அதனைத் தொடர்ந்து வெம்பிளி கோஸ்டி ஈஸ்டாம் கோஸ்டியில் ஒருவரைக் கடத்திச் சென்று வைத்து தாக்கி விட்டு கலைத்து வழட்டதாகவும் அதற்காகன பழிவாங்கலாகத் தான் இது இடம்பெற்றதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன. அச்செய்திகள் மேலும் தெரிவித்ததாவது இக்கொலையுடன் இது நின்றுவிடப் போவதில்லை என்றும் இப்பழிவாங்கல்கள் தொடர்கதையாகப் போவதாகவும் தெரிவிக்கிறது.

இந்த காடையர் குழுக்கள் பிரச்சினைகளை காவல்துறைக்குத் தெரிவிக்காமல் பழிக்கு பழிவாங்குவதிலையே ஆர்வமாக இருப்பதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொலை நடப்பதற்கு முன் தினம் இரவு கொலை நடந்த வீட்டை முற்றுகையிட்ட பொலிஸார் அங்கிருந்து கூரிய ஆயுதங்களைக் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது. துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டதா என்பது தெரியவில்லை. இச்செய்தியை காவல் துறையினர் உறுதிப்படுத்தவில்லை.

காவல்துறையினருக்குத் தகவலைக் கொடுத்து அங்கிருந்த ஆயுதங்கள் அகற்றப்பட்டது உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே இத்தாக்குதல் திட்டமிட்டு நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது. கதவை கம்பி போட்டு திறந்து கொண்டு உள்ளே நுழைந்த இரண்டுக்கு மேற்பட்ட நபர்கள் கீழே ஒருவரை நிறுத்திவிட்டு மேலே சென்று உள்ளனர். சத்தம் கேட்டு எழுந்து வந்த திலீபன் தயாராக வந்த நபரால் வெட்டப்பட்டு பின்னர் சுடப்பட்டார். சத்தம் கேட்டு மற்றைய அறைகளில் இருந்து வந்வர்கள் துப்பாக்கியுடன் நின்றவர்களைக் கண்டு ஓடி ஒழிந்தனர். கொலை வெறியர்கள் அங்கு நின்ற BMW காரையும் உடைத்து நொருக்கி விட்டுச் சென்று உள்ளனர்.

சம்பவம் நடந்த இடத்திற்கு பொலிஸார் விரைந்து இரத்த வெள்ளத்தில் கிடந்த திலீபனை கிங் ஜோர்ச் மருத்துவமனைக்கு இட்டுச் சென்றனர். அங்கு அவசர சிகிச்சை வழங்கப்பட்ட போதும் திலிபன் உயிர் தப்பவில்லை. சம்பவம் நடந்த வீடு தற்போதம் சீல் பண்ணப்பட்டு உள்ளது. இக்கொலை தொடர்பாக பொலிஸார் யாரையும் இதுவரை கைது செய்யவில்லை. ஆனால் அவ்வீட்டில் இருந்தவர்கள் பொலிஸாரால் விசாரிக்கப்பட்டு உள்ளனர்.

இக்கொலை ஒரு தனிப்பட்ட சம்பவம் அல்ல என்றும் இக்காடையர் குழுக்கள் பல்வேறு குற்றச் செயல்களிலும் ஈடுபட்டு இருப்பதால் விசாரணைகள் மிகவும் சிக்கலாகவும் நீண்டதாகவும் இருக்குமென காவல்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றனர். தற்போது வெம்பிளியில் இரட்டைக் கொலை தொடர்பான வழக்கு இடம்பெற்று வருவது யாவரும் அறிந்ததே. தமிழ் மக்கள் தொடர்ந்தும் பொலிஸாருக்கு அனுசரணையாக இருக்குமாறு காவல்துறையினரால் கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளனர். தகவல் வழங்குவோரின் அடையாளம் பாதுகாக்கப்படும் எனவும் அவர்கள் உறுதி அளித்து உள்ளனர்.

நஷ்டஈடு கோர
Insurance Claims
NO WIN - NO FEE
களவு, நெருப்பு, வெள்ளம், நீர்ச்சேதம் இவைகள் மூலம் ஏற்பட்ட நஷ்டங்களை நிவர்த்தி செய்ய மேலதிக விவரங்களுக்கு நாடுங்கள்
Pearsons
0800 3898 102

SHAN & Co.
SOLICITORS
Experts in Work Permit Applications
Call us now on
189 Northolt Road, South Harrow
Middx. HA2 0LY
Tel: 020 8864 7070
Fax: 020 8864 6070

We are a specialist Criminal Firm
24 Hour
POLICE STATION EMERGENCY SERVICE
JUNG & CO
SOLICITORS
41 NORTH ROAD, SOUTHALL, MIDDX. UB1 2JL
TEL: 020 8813 8996 Fax: 020 8813 8559
EMERGENCY Nos. 07956 279 170
07956 867 370
We can also assist with:
Family - Wills & Probate - Conveyancing

DISCOUNT (CONSTRUCTION)
DOUBLE GLAZING LTD.
FACTORY PRICES WHY PAY MORE?
MANUFACTURERS & INSTALLERS OF:
ALUMINIUM • HARDWOOD • RESIDENTIAL DOORS
PORCHES • PATIOS • UPVC
All Work Guaranteed For 10 Yrs
All Work Carried Out By Our Own Qualified Craftsmen
Retail & Trade Welcome All Double Glazing Repair Work Undertaken
Tel: 020 8514 0819 Fax: 020 8514 2333
Showroom: 844 Romford Rd, E12

FREE இலவசம்
The UDHAYAN
உதயன்
UK's No.1 National Tamil Newspaper
ADVERTISE FOR BEST RESULTS
020 8952 5677

UDHAYAN
for your cost effective ADVT.

Genga & Co.
Solicitors
Administor of Oaths
Legal Aid Francise for Crime and Immigration
Specialists in:
Asylum + Immigration Law
Criminal Law-
Police station
Magitrate court
Crown court
தேர்ச்சி பெற்ற சட்ட வல்லுனர்கள்:
"அகதி அந்தஸ்து குடிவரவு குடியகல்வு குற்றவியல் வழக்குகள்"
"மஜிஸ்ரேட் நீதிமன்றம், பொலிஸ்நிலையம்"
எந்தவிதமான அவசரத் தேவைக்கும் 24 மணித்தியால தொடர்பு இலக்கம்
07956 569 559
Tel: 020 8795 5020
Fax: 020 8795 5030
Genga & Co.
1st & 2nd Floor
588 High Road Wembley,
Middx. HA0 2AF

WARAN & COMPANY
SOLICITORS
Commissioners of Oath
Community Legal Service
Specialist Help Point Immigration & Nationality
Specialists in:
* Immigration & Nationality
* Asylum & Refugee matters
* Housing
* Conveyancing (Residential & Commercial)
* Liquor Licencing
Call Mr. S. K. Nageswaran LLB
Mrs. P. Nageswaran LLB (Hons.), LLB (Lon)
on
Tel: 020 8808 2397
583 High Road, Tottenham, London N17 9SY Fax: 020 8801 8818

MARKANDAN & CO SOLICITORS
Solicitors & Administrators for Oaths
720 Romford Road, Manor Park London
Tel : 0208 514 8188 Fax : 0208 514 8303
Email: mm@markandan-solicitors.co.uk
We now specialise in Canadian Student Visas leading to better job prospects in North America and Canada.
Minimum Qualification: GCE A/L with 3 passes (Sri Lankan /UK)
The Course fees for the above courses are 50% cheaper than in the UK.
Failed Asylum seekers could apply and migrate to Canada.
For a free advice on the above, please contact Mr Das or Mr Kumar on 02085148188

தீராத உங்களின் மன வேதனைகள் தீர்ந்திட, உங்களின் வாழ்க்கையில் என்றும் வெற்றி கண்டிட தரிசியுங்கள் அன்னையை
020 8905 7775, 020 8952 7775

☆ ☆ To Know your Birth Star contact 020 8905 7775 ☆ ☆

# MAAZA LIMITED

maaza

The Tropical Fruit Drink




**Trade Enquiries Welcome**

Contact Maaza Ltd. on

**020 8904 9989**

Fax: 020 8904 5068

www.tastybite.com

DRINKS AVAILABLE RETAIL
FROM NEAREST GROCERIES SHOP

Traders please contact

Unit G3 Wembley Commercial Centre, East Lane, Wembley, Middx. HA9 7UR

# TRAVLIN STYLE

Low Cost flights / Hotel / Insurance to all Destinations

| | | | | | |
|---|---|---|---|---|---|
| INDIA | £349 | CANADA | £245 | COLOMBO | £365 |
| DUBAI | £250 | NAIROBI | £325 | SOUTH AFRICA | £335 |
| NEWYORK | £145 | ORLANDO | £200 | PARIS | £49 |
| | | LISBON | £120 | | |

All Prices are subject to availablity and Airport Taxes. Special Discount to Senior Citizens and Groups to India.

Travelin Style Ltd. 46 Church Road, Stanmore, Middx.HA4 4AH

**Tel: 020 8954 0077**

Retail agents for Atol holders

# NESAN Cash & Carry

NEWLY OPENED

MANY OPENING OFFERS

* இலங்கை மரக்கறி வகைகள், நிரு, யாழினி, லீலா, TRS தயாரிப்புகள், சமுத்திரா, யாழினி கடல் உணவுகள் யாவும் குறைந்த விலையிலும்
* திருமண ஆடை அலங்காரங்கள் வாடகைக்கும்
* மேலும் பிரதி வாரமும் அதிவிசேட விலைக்கழிவில் பொருட்களும் உண்டு

**SPECIAL OFFERS EACH WEEK**

* ஓடியோ கேஸட், C.Dக்கள் விற்பனைக்கும் உண்டு

வாருங்கள்

**Tel: 020 8574 4018**

**217 The Broadway Southall**



The UDHAYAN

உதயன்

ADVERTISE FOR BEST RESULTS

020 8952 5677

# NET TRY தமிழ் சூப்பர்மார்க்கெட்

27 Watling Avenue, Edgware, Middx. HA8 0JD

புதிய நிர்வாகத்தின் கீழ் **020 8952 5959**

இலங்கையிலிருந்து பெறப்படும் உடனடி மரக்கறி வகைகள், லீலா, நிரு. Fudco உடன் சமுத்திரா கடலுணவுப் பொருட்கள், மதுபான வகைகள், கோயிலுக்கு உரிய பொருட்கள், இதர பல சரக்குப் பொருட்கள், தாயகப் பொருட்கள் யாவும் இங்கு கிடைக்கும்.

தமிழ், ஹிந்தி புதிய பழைய சினிமா வீடியோ கஸட்டுகள், வீ.சீ.டி.கள், டீ.வீ.டி.கள் வாடகைக்கும், ஓடியோ கஸட்டுகள், சீ.டீ.க்கள் விற்பனைக்கும் இங்கு இருக்கின்றன.

BODY WARMERS • HIKING BOOTS

# HARTEX

Established 1969

## THE GREAT OUTDOORS

TENTS • BAGS • SLEEPING BAGS • AIR BEDS • MAP CASES

RAINWEAR • CUTLERY SETS AND PLATES • WATER BOTTLES

PULLOVERS
COOKWARE
TENTS
RUCKSACKS
HAMMOCKS
HEADWEAR
MAPS
GAITERS
SHORTS
SOCKS
THERMAL UNDERWEAR
GROUND SHEETS




COMBAT CLOTHING
RAINWEAR
BOOTS
GLOVES
BELTS
WATER BOTTLES
BODY WARMERS
WEBBING
HIKING SOCKS
FOAM MATS
AIR BEDS

COMPRESSOR BAGS • MONEY BELTS

| | |
|---|---|
| 55 Victoria Road | 321 Northolt Road |
| Ruislip Manor | South Harrow |
| Middlesex HA4 9BS | Middlesex HA2 8JA |
| TEL: 01895 634244 | TEL: 020 8864 3333 |

OPEN 7 DAYS




20 YEARS MULTILINES

# MULTILINES LIMITED

Designer Bedrooms / Kitchens & Shopfitters

- DESIGNER BEDROOMS
- KITCHENS
- LOUNGE UNITS
- HOME-STUDY
- TRADITIONAL INDIAN SEATING
- MANDIRS
- BEDS





DELIVERY OF PRODUCTS ONLY WITHIN M25

Unit 1, 255 Water Road, Abbeydale Industrial Estate, Wembley, Middx. HA0 1JW

Tel: 020 8997 7788 Fax: 020 8997 9988

E mail: info@multilines.co.uk, Web: www.multilines.co.uk